ISSN 2012 - 6700

இதழ் - 27

# பூங்காவனம்

கலை இலக்கிய சமூக சஞ்சிகை



கெகிறாவ ஸஹானா

PLC

பூங்காவனம் இலக்கிய வட்டம்

With Best Compliments From:-

FIVE STAR TEXTILES CENTRE

WHOLESALE & RETAIL TEXTILE DEALERS

No. 95, 2 nd Cross Street, Colombo - 11, Sri Lanka.
Tel :- 011 2441810, 2345280, 2441809
Fax :- 94 - 1 - 2345184 / 2582453
E-mail :- shafeeka@sltnet.lk

**வெலிகம ரிம்ஸா முஹம்மதின் எரிந்த சிறகுகள் கவிதைத் தொகுதி**

கொழும்பு பிரைட்டன் ரெஸ்ட் மண்டபத்தில் இடம்பெற்ற 14 ஆவது நகைச்சுவை சங்கமத்தின்போது எழுத்தாளர் வெலிகம ரிம்ஸா முஹம்மதின் 12 ஆவது நூல் வெளியீடான 'எரிந்த சிறகுகள்' கவிதைத் தொகுதியின் முதல் பிரதியை புரவலர் புத்தகப் பூங்காவின் ஸ்தாபகத் தலைவர் புரவலர் அல்ஹாஜ் ஹாஷிம் உமர் அவர்கள் பெற்றுக்கொள்வதையும், அருகில் ஊடக அதிகாரி நூருல் அயின் நஜ்முல் ஹுஸைன், ஆசிரியை ஷாமிலா செரீப் முஸ்டீன் ஆகியோரையும் படத்தில் காணலாம்.

**படமும் தகவலும் – தியத்தலாவ எச்.எப். ரிஸ்னா**



# பூங்காவனம்

தோற்றம் - 2010 மே 30
இதழ் 27 - 2016 டிசம்பர்
ISSN 2012 - 6700

**பிரதம ஆசிரியர்**

ரிம்ஸா முஹம்மத்

**துணை ஆசிரியர்கள்**

எச்.எப். ரிஸ்னா
டப்ளியு.எம். வஸீர்

**ஆலோசகர்**

ஏ.சீ. ஜரீனா முஸ்தபா


**வங்கித் தொடர்புகளுக்கு**

Commercial Bank,
Mount Lavinia Branch,
M.F. Rimza
A/C No :- 8930020287.

என்ற இலக்கத்திற்கு காசை வைப்பிலிட்டு அதன் பற்றுச் சீட்டை அனுப்ப வேண்டும். காசுக் கட்டளையாயின் (M.F. Rimza - Dehiwala Post Office) எனக் குறிப்பிட்டு அதற்கான பற்றுச் சீட்டையும் அனுப்ப வேண்டும். காசோலையாயின் குறுக்குக்கோடு இடப்படாத காசோலையை M.F. Rimza எனக் குறிப்பிட்டு அனுப்ப வேண்டும்.

| | | |
|---|---|---|
| தனிப் பிரதி | - | 100/= |
| தபால் மூலம் | - | 140/= |
| வருட சந்தா | - | 600/= |

**தொடர்புகளுக்கு**


"Poongavanam"
21 E, Sri Dharmapala Road,
Mount Lavinia,
Sri Lanka.

**Email:-**
poongavanam100@gmail.com

**Website:-**
www.poongavanam100.blogspot.com

**Phone:-**
0094 (0) 775009222
0094 (0) 719200580


புதிய ஆக்கங்களும், இச்சஞ்சிகை பற்றிய விமர்சனங்களும் எதிர்பார்க்கப் படுகின்றன. நூல் விமர்சனத்துக்கு அனுப்புபவர்கள் நூலின் இரண்டு பிரதிகளை அனுப்ப வேண்டும்.


படைப்புகளுக்கு படைப்பாளிகளே பொறுப்பு. செவ்வைப்படுத்த ஆசிரியர் குழுவுக்கு உரிமையுண்டு.

# உங்களுடன் ஒரு நிமிடம்

எல்லாம் வல்ல இறைவனுக்கே எல்லாப் புகழும்!

பூங்காவனம் இதழ் 27 உங்கள் கரம் கிட்டியிருக்கும் இவ்வேளையில் பூங்காவனத்தின் அபிமான வாசகர்களுக்கும் விளம்பரதாரர்களுக்கும் எமது பணிவான அன்பையும் நன்றியையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

டிசம்பர் மாதம் 10 ஆம் திகதி உலக மனித உரிமைகள் தினமாக பிரகடனப்படுத்தப்பட்டிருக்கின்றது.

மனித உரிமை என்பது எல்லா மனிதர்களுக்கும் உரித்தான அடிப்படை உரிமைகளையும் சுதந்திரங்களையும் குறிக்கின்றது. இன, மத, சமூக, கலாசார விடயங்களுக்கு அப்பால் மனிதர்கள் யாவரும் சமம் என்ற நிலைப்பாட்டில் அவரவர்க்குரிய உரிமைகளும் சுதந்திரங்களும் அத்தியவசியப்படுகின்றன. இவற்றுள் வாழும் உரிமை, உணவுக்கான உரிமை, நீருக்கான உரிமை, தகவலறியும் உரிமை, கல்வி உரிமை, மொழி பண்பாட்டு உரிமை, சொத்துரிமை, ஊடகச் சுதந்திரம், சிந்தனைச் சுதந்திரம், கருத்து வெளிப்பாட்டு சுதந்திரம் ஆகியன பிரதானமானவையாகும். இவை மனிதனுக்கு மனிதன் வேறுபட்ட போதிலும் அடிப்படையாக ஒவ்வொருவரும் அனுபவிக்க வேண்டிய அல்லது அனுபவிக்கத் துடிக்கும் உரிமைகளாக கணக்கிடப்படுகின்றன. ஆனால் இன்று அவை மறுக்கப்பட்டு வருவதன் காரணமாக பல பிரச்சினைகளை உலகம் எதிர்நோக்கியுள்ளது.

ஒரு நாட்டின் சுதந்திரத்தை இன்னொரு நாடு முற்றாக அழித்து தன் கட்டுப்பாட்டில் வைத்திருக்க முனைவதும், எதிர்கேள்வி கேட்கும்போது அதிகார வர்க்கத்தினால் அச்சுறுத்தப்படுவதும் பரவலாக நடந்து வரும் நிதர்சனங்களாகும். உரிமைகளை முழுவதுமாக அனுபவிக்க வேண்டும் என்பவர்கள் முதலில் கடமைகளைச் சரியாக செய்துகொள்ளவும் முனைப்புடன் செயற்பட வேண்டும். கடமைகளை துறந்துவிட்டு உரிமைக்காகப் போராடும் போராட்டம் உப்புச்சப்பற்றதாகவே இருக்கும்.

சமகாலத்தில் அதிர்ச்சிக்குள்ளாக்கியிருக்கும் வரி அதிகரிப்பினால் வாழும் உரிமை பறிபோய் விடுமோ என்ற அச்சம் மக்கள் மத்தியில் எழுந்துள்ளதை அவதானிக்க முடிகின்றது. இத்தகைய அடக்குமுறைகளிலிருந்து மக்கள் தம்மைப் பாதுகாத்துக்கொள்ள அரசாங்கம் துரிதமான செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும். அதன் மூலம் நாட்டுப் பிரஜைகளின் அடிப்படை உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும்!!!

**ஆசிரியர்**

# பூங்காவினுள்ளே


**நேர்காணல்**

கெகிறாவ ஸஹானா

**கவிதைகள்**

மன்னார் அமுதன்
பதுளை பாஹிரா
இல்யாஸ் இம்றாஸ்
பி.ரி. அஸீஸ்
வெலிப்பன்னை அத்தாஸ்
ஆ. முல்லைதிவ்யன்
மருதூர் ஜமால்தீன்
ஹைருன் ரஹ்மான்
எம்.எஸ்.எம். சப்ரி
செ.ஜெ. பபியான்
ஷப்னா செய்னுல் ஆப்தீன்

**சிறுகதைகள்**

சூசை எட்வேட்
சுமைரா அன்வர்
எச்.எப். ரிஸ்னா
எஸ்.ஆர். பாலசந்திரன்
கினியம இக்ராம் தாஹா

**கட்டுரைகள்**

கவிஞர் ஏ. இக்பால்

**நூல் மதிப்பீடு**

ரிம்ஸா முஹம்மத்
பதுளை பாஹிரா

**வாசகர் கடிதம்**

**நூலகப்பூங்கா**



# நேர்காணல்

## கெகிறாவ ஸஹானா


நேர்கண்டவர் – ரிம்ஸா முஹம்மத்

**01. உங்கள் கல்லூரி வாழ்க்கை, தொழில் அனுபவங்கள் பற்றிக் குறிப்பிடுங்கள்?**

ஆரம்பக் கல்வியை கெகிறாவ முஸ்லிம் மகா வித்தியாலயத்திலும், உயர்தரக் கல்வியை கம்பளை ஸாஹிறாக் கல்லூரியிலும் கற்றேன். ஆங்கில மொழி ஆசிரியர் போட்டிப் பரீட்சையில் சித்தியெய்தி 1991 இல் பதவியேற்று, இருபது வருடங்களுக்கு மேலாக சேவையாற்றியபின் தற்போது சுயவிருப்பின் பேரில் ஓய்வு பெற்றிருக்கின்றேன்.


**02. இலக்கியம் மீது உங்களுக்கு ஆர்வம் ஏற்படக் காரணம் என்ன?**

எனது வீட்டில் அனைவரும் தீவிர வாசகர்கள். பத்திரிகைகள் படிப்பார்கள்; தொடர்கதைகளைப் பற்றி விமர்சிப்பார்கள்; உலக விவகாரங்களைப் பற்றிப் பேசிக்கொள்வார்கள். வீட்டில் தொடர்ந்து வாங்கிய மித்திரன் பத்திரிகையில் வந்த தொடர்கதைகளைப் படித்து அவற்றின் அடுத்த கட்டம்பற்றி யோசிப்பேன். வானொலியும், நல்ல சினிமாக்களும் எனது ஆற்றல்களை வளர்த்தன. எனது ஆசிரியர்களும் அதற்கு உதவினார்கள். பின்னாளில் சிறந்த எழுத்தாளர்களுடைய எழுத்துகளைப் படித்தேன். எனது சிந்தனைகள் பரந்தன.



**03. உங்களது முதலாவது ஆக்கம் எப்போது, எதில் வெளிவந்தது?**

பதினைந்து வயதில் எழுதத் தொடங்கினேன். வானொலியில் பீ.எச். நடத்திய ஒலி மஞ்சரிக்கு எழுதிய முதல் கவிதை அவர் குரலில் ஒலிபரப்பானது.




அந்நிகழ்ச்சிக்கு சிறுகதைகளும் எழுதினேன். அதற்கு முன்னர் சிறு துணுக்குகள் எழுதியுள்ளேன். 1989இல் முதல் பிரசுரம் மல்லிகையில். அடுத்தடுத்த இதழ்களில் கவிதைகளும் பிரசுரம் கண்டன.

**04. ஒரு நல்ல கவிதை எப்படி இருக்க வேண்டும்? புதுக் கவிதைக்கும், மரபுக் கவிதைக்கும் என்ன வேறுபாடு காண்கிறீர்கள்?**

கவிதையாக இருக்கவேண்டும். மனதைத் தொடலாம் அல்லது சுட்டெரிக்கலாம். ஆனால், கவிதைப் பண்பு இருக்க வேண்டும். அதுவே மரபுக் கவிதைக்கும், புதுக் கவிதைக்கும். ஆனால், புதுக் கவிதையின் நெகிழ்ச்சித் தன்மையும், வளைந்து கொடுக்கும் போக்கும் பலரைக் கவர்ந்திருக்கின்றது. அத்துடன், அதன் எளிமை எல்லோருக்கும் எழுதலாம் என்ற ஆசையைக் கொடுத்திருக்கின்றது. அதன் காரணமாக புதுக்கவிதை மிகப் பிரபலமாக ஆகிவிட்டது.

**05. உங்களது சிறுகதைகளின் கருப்பொருட்கள் பற்றி?**

எதையும் வரையறுத்து நான் எழுத முயலவில்லை. மனதில் பட்டதையும், மனதைப் பாதித்ததையும் அதிகம் எழுதியிருக்கிறேன். பெண்கள், குழந்தைகள், ஆண்கள், மிருகங்கள் என்று உணர்வுகளை அதிகம் வெளிப்படுத்தியிருக்கிறேன். தனியாக ஒரு கருப்பொருளைத் தெரிவுசெய்து கொள்வது இக்கால எழுத்தாளன் ஒருவனுக்கு மிகச் சிரமமானது. அவன் அன்றாடம் காணுகின்ற, முகம் கொடுக்கின்ற பிரச்சினைகள் இன்று ஏராளமாக உள்ளன. அத்துடன் அவன் சக மனிதனையும் எப்போதும் அவதானிக்கின்றவனாகவும், அவனில் தன்னைக் காண்பவனாகவும் இருப்பதனால் வரையறுத்து எழுதுவது கடினமானது.



**06. இதுவரை நீங்கள் எழுதி வெளியிட்ட நூல்கள் எவை? நூல் வெளியீடுகளை எப்படி மேற்கொள்கிறீர்கள்?**

இதுவரை ஒன்பது நூல்களை வெளியிட்டுள்ளேன். அவையாவன:-




1. ஒரு தேவதைக் கனவு - சிறுகதை
2. இன்றைய வண்ணத்துப் பூச்சிகள் - கவிதை
3. ஒரு கூடும் இரு முட்டைகளும் - குறுநாவல்
4. சூழ ஓடும் நதி - ஆய்வு
5. மான சஞ்சாரம் - சுயசரிதை
6. இருட்தேர் - கவிதை
7. முடிவில் தொடங்கும் கதைகள்
8. அன்னையின் மகன் - நாவல்
9. ஊமையின் பாஷை - சிறுகதை

இந்த நூல்களை வெளியிட நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபை மற்றும் வட மத்திய மாகாண கலாசார அலுவல்கள் திணைக்களம் என்பன அனுசரணை புரிந்துள்ளன. தனி முயற்சியாகவும் வெளியிட்டிருக்கிறேன்.

**07. உள்ளூர், சர்வதேச எழுத்தாளர்களுடனான உங்களது தொடர்புகள், உறவுகள் எப்படியுள்ளது?**


அனைத்து எழுத்தாளர்களது நூல்களையும் வாசிப்பேன். பொதுவாகக் கூறுவதாயின் சகல எழுத்தாளர்களுடனும் ஒரு சுமுகமான உறவு உள்ளது என்றே கூறிக் கொள்ளலாம்.

**08. தற்போது வெளிவரும் பத்திரிகைகளின் இலக்கியப் பங்களிப்புக்கள் பற்றி யாது கூறுவீர்கள்?**




தேர்ந்த வாசகன் ஒருவனைத் திருப்திப்படுத்துமளவிற்கு இல்லாவிட்டாலும், ஓரளவு நன்றாகவே செய்கின்றன. புதிய தலைமுறை ஆக்க கர்த்தாக்களுக்கு எழுதுவதற்கு அதிக வாய்ப்புகளும், இடங்களும் கொடுக்கப்படுவதை அவதானிக்க முடிகின்றது. சுருக்கமாகச் சொன்னால், எப்போதுமே இலக்கிய வளர்ச்சிக்கான ஆதரவு பத்திரிகைகள் மூலமாக கிடைப்பது உண்மையே.

**09. இணையத் தளங்களின் வருகையினால் வாசிப்பு மட்டத்தின் நிலை பற்றிய உங்கள் கருத்தை கூறுங்கள்?**



வாசிப்பையும், தகவல் பரிமாற்றத்தையும் வேகமான வளர்ச்சித் திசைக்கு நகர்த்தியுள்ளன. ஆழ்ந்த சிந்தனையையும், சுய கல்வி வளர்ச்சியையும் ஊக்குவித்துள்ளன. புத்தகங்களைத் தேடித் திரிய வேண்டிய அவசியமின்மை பெரும் ஆசுவாசத்தை ஏற்படுத்தியுள்ளது. நாம் ஆசைப்படுகின்ற ஒன்றை விரல் நொடிப்பொழுதில் தேடிப் படித்துவிடலாம் என்பது எவ்வளவு சௌகரியமானது! எனினும், அதிலும் சில வரையறைகள் பேணப்படல் நன்று. வேகமும் மட்டுப்பட வேண்டும்.

**10. உங்களைக் கவர்ந்த எழுத்தாளர்கள் யாவர்?**

தரம் பிரிக்கத் தெரியவில்லை. சொல்லும் பாணியில், சிந்தனையைத் தூண்டும் விதத்தில் ஒவ்வொருவரைப் பிடிக்கின்றது. பிடிக்காததும் இருக்கின்றது. எப்போதும் என்னை வியப்பிலாழ்த்தும் எழுத்தே என்னைக் கவர்கின்றது. நாம் இதுகாறும் சொல்ல நினைக்காத ஒன்றை, சொல்லத் தெரியாமல் தவித்த ஒன்றை இவர் எப்படி இவ்வளவு அழகாகச் சொன்னார் என்ற வியப்பு அது; எவ்வாறு இவ்வளவு நீளமாகச் சொன்னார் என்பதும் அதுவே; எவ்வளவு தைரியமாகச் சொன்னார் என்பதும் அதுவே.

**11. எதிர்காலத்தில் எவ்வகையான இலக்கிய முயற்சிகளில் ஈடுபடுவீர்கள்?**

நாவல்கள். எப்போதும் நாவல்கள் என்னைப் பிரமிக்க வைக்கின்றன. அன்றைய வயதில் பொன்விலங்கு, குறிஞ்சிமலர் முதலாக இன்றுவரை படித்துள்ள ஏராளமான நாவல்கள் ஒவ்வொரு விதத்தில் பிரமிப்பை ஏற்படுத்துகின்றன. சிறிய உருவத்தில் இருந்தாலும், நாகம்மாள் சொன்ன செய்தியும் ஒரு பிரமிப்பே. மோகமுள் மிகப் பெரிய பிரமிப்பு. இலங்கையில் வீரகேசரிப் பிரசுரங்கள் பலவற்றைச் சிறு வயதில் படித்திருந்தாலும், இன்று அவற்றை உரிய பழைய வடிவத்தில் காணக்கிடைக்கவில்லை. அதை எண்ணும்போதும், அவை தற்போது கையில் அதே வடிவத்தில் கிடைத்தால்






எவ்வளவு பரவசமாக இருக்கும் என்று எண்ணும்போதும், நாவல்களே எட்டாத கனியாக என்னை ஈர்க்கின்றன.

**12. உங்களுக்கு இதுவரை கிடைத்த பரிசுகள், விருதுகள் பற்றிக் குறிப்பிடுங்கள்?**

- சிறுகதைக்கான தகவம் பரிசு
- தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் கவிதைக்கான பரிசு
- மட்டக்களப்பு எழுத்தாளர் ஊக்குவிப்பு மையத்தின் தமிழியல் விருது
- அரச சாகித்திய விழா சான்றிதழ்
- யாழ். கலை இலக்கியப் பேரவையின் சான்றிதழ்
- பாராட்டப்படும் இளங்கலைஞர் - அகில உலக இஸ்லாமியத் தமிழிலக்கிய மாநாடு (2002)

**13. இளைய தலைமுறை எழுத்தாளர்களுக்கு என்ன கூறுவீர்கள்?**



அதிகம் வாசியுங்கள்; சிந்தியுங்கள்; எழுதுங்கள்; எழுதியதைச் சிறிது காலத்தின் பின்பு மீண்டும் படித்துப் பாருங்கள். திருத்தங்கள் இருப்பின் செம்மைப்படுத்துங்கள்; பின்னர் பிரசுரியுங்கள்; நிதானமாகப் புத்தகங்களை வெளியிடுங்கள்; விமர்சனங்களை எதிர்கொள்ளுங்கள்; மூத்த எழுத்தாளர்களது படைப்புகளையும், அவர்களது பணிகளையும் அறிந்து உணர்ந்துகொள்ளுங்கள்; எல்லோருடனும் கலந்துரையாடுங்கள்; கலந்துரையாடல்கள் பல தேடல்களுக்கு வழிவகுக்கும். தேடல் மூலமாகக் கண்டடைவதற்கு இலக்கியத்தில் நிறைய உண்டு; இளம் எழுத்தாளர்களுக்கு அதற்கான வாய்ப்புகளும் உண்டு; வசதிகளும் உண்டு!!!

# நான் கழுதையாகிவிட்டேன்

அழகாய் உடுத்தி வந்த நாட்களில்
என்னைப் பார்த்து சொன்னாய்
கழுதைக்கு சேனம் கட்டினால் குதிரையாகுமா
அவிழ்த்து விட்டு அள்ளிப்போடென்று..

அழுகிய மணமொன்றிற்கு அஞ்சி
மூக்கைப் பொத்திய நாட்களில்
மூச்சை ஆழ இழுத்து வெளி ஊதி சொன்னாய்
கழுதைக்கு தெரியுமா கற்பூர வாசனையென..

உழைத்து ஓய்ந்து அயர்ச்சியடைந்த நாட்களில்
உண்டுறங்க ஓர் இடம் கேட்டேன்
கழுதை புவியிலிருந்தாலென்ன
பாதாளத்தில் இருந்தாலென்னவென்றாய்..

நீ சொல்லும் புனிதக் காதலை
நானும் கண்டடைந்து
மாலையும் கழுத்துமாய் நின்றபோது
கழுதைக் காமம் கத்தினால் தீருமென்றாய்..

சந்ததிப் பெருக்கத்தில் நிலமொன்று கேட்டேன்
நிலத்திற்கு விலையாக நிறையக் கேட்டாய்
கழுதை விட்டையானாலும்
கைநிறைய வேண்டுமென்றாய்..

சந்ததி சந்ததியாய் உழைக்கிறேன்
உன் சந்ததிக்கு.. அலுங்காமல்
அள்ளிக் குவித்துக் கொண்டு சொல்கிறாய்
கழுதை உழுது கம்பு விழையாதென..

இன்னும் நிறையச் சொல்லியிருக்கிறாய்..
கேட்டுக் கேட்டு நான் யாரென மறந்துவிட்டேன்..
காதுகள் கூட கழுதை போலாகிவிட்டது..

கழுதைச் சுமை அறியாத
உன்னைப் போலிருந்துதான் என்ன செய்ய!!!

மன்னார்
அமுதன்

## நிறம் மாறாத நிஜங்கள்

நிர்ப்பந்தங்களால் நிலைகுலைந்து
தரம் குறையாமல் மனநிறங்கள்
தலைநிமிர்ந்து தகை சூடும் வேளை
தனித்துவம் படரும் ஓர்மையிலே
வாழ்த்துக்களும் வரவேற்புக்களும்
மானில நேசிப்பின் சாட்சியாக!

மன சுவாசங்கள்
இனவாசங்களோடு
சகவாசம் பகிர்ந்திடும் தருணம்
பகைத்திடும் பாவங்கள், குற்றங்கள்
பரிதவித்து விலகிடும்!

தன்னாதிக்கம் செலுத்தும்
உண்மையது
மனித சித்தாந்தத்தை நியாயப்படுத்தி
மனவெளியை பிரகாசப்படுத்தும்!

நிறைவான நிறமதின்
வலிமைக்குள் உயிர்ப்புகள் உன்னதம்
பெறும் வேளை நானிலத்தின்
நல்லெண்ண நட்புறவுகள்
கௌரவ சின்னங்களைப் பதிக்கும்!
மனித உரிமைப் பக்கங்களில்
முதன்மை செய்திகளாகிடும்!

மனித ஒருமைப்பாட்டிற்கு
வளம் தந்து பலமாக்கிடும்
புனித சுவாசத்தின் ஆராதனைகளில்
கார் பொழியும் வைகறையாக
பேர் மொழியும்
நன்மைகளுக்கும் நலன்களுக்கும்!!!

**பதுளை பாஹிரா**

## விதவை

இந்த இரவுப்பொழுது
இன்றும் என் தூக்கத்தை
சூறையாடுகிறது..
எத்தனை எண்ணங்கள்
இதயக் கூண்டுக்குள்ளே..

இளமைக் கனவை
தொலைத்தேன் - என்
இளமையைத் தொலைத்தேன்
பெற்றது இரண்டுமே என்னோடு..

கைப்பிடித்த ராஜகுமாரன்
என் இரவின் சொந்தக்காரன்
என் கற்பின் காவலன்
என் உணர்வின் உருவாய் ஆனவன்
தனிச் சிறைக்குள்
என்னை அடைத்துவிட்டு
எங்கே சென்றானோ?

என் அறைக் கம்பிகள்
சிறைக் கம்பிகள் ஆயின..
வர்ணப் புடவைகள்
வெள்ளையாய் மாறின..

புன்னகையோ புயலோடு
காலமோ கனவோடு
வாழ்க்கையோ இடிபாடு..

பெண்மை என்ற பெயர் தாண்டி
விதவை என்ற
பட்டப் பெயர் பதிவுகளை
ஏற்றுக்கொண்ட வண்ணம்..
என் கவலையால் கண்ணீர் சிந்தி
காலத்தை கெஞ்சியவளாய்!!!

**இல்யாஸ் இம்றாஸ்**
**காத்தான்குடி**

# அம்மாவின் வேண்டுதல்

## சிறுகதை

சூசை எட்வேட்

பெரியப்பா கடும் சுகவீனமுற்றிருக்கிறார். அவரைப் போய்ப் பார்ப்பதற்காக பெரிய கடைக்குப் போனேன். பெரிய கடையில் பெரிய மாதா கோவிலடியில்தான் அவர்கள் இருக்கிறார்கள். அவர் பெரியாஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்தவர். அவசர சிகிச்சைப் பிரிவிலும் கிடந்தவர். அப்போதும் இரண்டு மூன்று முறை அவரைப் பார்த்து வந்திருக்கிறேன். இப்போது வீட்டில் கொண்டு வந்து வைத்திருக்கிறார்கள். சிகிச்சை பலனளிக்கவில்லையோ, வைத்தியர்கள் கைவிட்டுவிட்டார்களோ தெரியவில்லை. வீட்ட போய்ப் பார்த்தால்தான் தெரியும்.

அவர்கள் வீடு மருத்துவமனைக்கு அதிக தூரமில்லை. திருகோணமலையின் நகர்புறத்தில் வாழ்பவர்களுக்கு இப்படியொரு வசதி. சந்தையோ கடைத் தெருவோ வைத்தியமோ எல்லாம் காலடியில்.

நான் என் மிதிவண்டியை எடுத்துக் கொண்டு அவர் இருப்பிடம் நோக்கி விரைந்தேன். அங்கே அவர் இல்லத்தில் இருந்து மூன்று நான்கு பேராக ஆண்களும் பெண்களுமாக வருவதும் போவதுமாக இருந்தனர். உறவினர் அயலவர் தெரிந்தவர் என்று அவர்களில் இருந்தனர். நான் பரபரப்பாகினேன். நிலமை ஆபத்தான கட்டம் போலும்.

விரைவாக நான் உள்ளே போனதும் கண்ட காட்சி சோகமாகவே இருந்தது. பிள்ளைகள் உறவினர் மூலைக்கொருவராக நின்றனர். முகத்தில் சோக ரேகை பரவியிருந்தது. பெரியம்மா அவர் அருகில் கிடந்தார். சோகமே வடிவெடுத்திருந்தார். மகள் சாப்பாட்டுக் கோப்பையை நீட்டிக் கொண்டு, "ஒருவாயெண்டாலும் சாப்பிடணை" என்று சொல்லிக் கொண்டிருந்தாள். பெரியம்மா செவிடாகி மௌனியாகி செயலிழந்து போயிருந்தார்.

நான் மூத்த மகனை அணுகினேன். அவர் எனக்கும் அண்ணர்தான். அவருக்கு தலை பாதிக்கு மேல் நரைத்துவிட்டது. அவரிடம் பெரியம்மாவின் உடல் நிலையை விசாரித்தேன். "வேறு வைத்தியம் செய்து காப்பாற்ற முடியாதா?" என்று கேட்டேன். அவர் இலேசாகப் புன்னகைத்தார். "இனி செய்வதற்கு ஒன்றுமில்லை. இனி ஆண்டவன் விட்ட வழிதான்," என்றார். இதைச் சொல்லும் போது அவர் கழுத்திலே தொங்கிய சிலுவையை பிடித்துக் கொண்டிருந்தார்.

அவர் மேலும் சொல்கையில் "முதுமை, நோய், மரணம் இவற்றில் இருந்து யாராலும் தப்ப முடியாது. எமது கெட்டித்தனத்தால் இவற்றை பிற்போடலாம். ஆனால் தவிர்க்க இயலாது". என்றார். அவர் ஒரு ஆசிரியர் அதிலும் மறைக்கல்வி ஆசிரியர். அவர் மேலும் சொன்னார்: "நினையாத நேரத்தில் மனுமகன் வருவார் (எம்மை அழைப்பார்) ஆகையால் மறு உலக வாழ்வுக்கு எப்போதும் (பாவம் செய்யாமல்) நாம் ஆயத்தமாகவே இருக்க வேண்டும்".

நான் மீண்டும் பெரியப்பா பக்கம் வந்தேன். "இந்தத் தேத்தண்ணிய எண்டாலும் குடியணை அம்மா. நேற்றில இருந்து அன்னம் தண்ணி இல்லாமல் கிடக்கிறாயணை. அப்பாவுக்கு முதல் நீ போயிருவாய் போல கிடக்கு". இளையவள் முகத்துக்கு நேரே கோப்பையை நீட்டிப் பிடித்துக் கொண்டு பிரலாபித்தாள். பெரியம்மா தாழ்ந்திருந்த தன் தலையை மிக உணர்ச்சியின் உந்தலோடு நிமிர்த்தினார். உணர்ச்சி வெறியோடு பேசினார்.

"எனக்கு முதல் என்ர புருசன் சாகிறத என்னால பார்க்கேலாது. விதவைக் கோலத்தோட நான் இருக்கமாட்டன். அவருக்கு முதல் நான் சாக வேணும். பூவோட பொட்டோட தான் நான் போய் சேர வேணும். சேர வேணும்".

பெரியம்மா வெறிபிடிச்சது போல இந்த வசனத்தை திரும்பத் திரும்ப உச்சரித்துக் கொண்டே இருந்தார். பெரியம்மா என்ன பெரும்பாலும் பெண்கள் வாழாவெட்டி, மலடி, விதவை என்ற பேரை - இழிமொழிகளை ஏற்க கட்டாயம் விரும்ப மாட்டார்கள்தான். ஆனால் பெரியம்மாவுக்கு எழுபத்தைந்தைத் தாண்டிவிட்ட வயது. தலையும் முற்றாக நரைத்துவிட்டது. ஆனால் அவகூட விதவையாக சில நாட்கள்கூட வாழத் தயாராயில்லை. காலம் முழுக்க பூவோடு பொட்டோடுதான் வாழ வேண்டுமாம்.

அவ பேச்சு என் நெஞ்சில் ஆழத் தடம் பதித்துவிட்டது. நான் விடைபெறுவதற்காக பெரியப்பா அருகில் போனேன். அவர் கட்டிலில் நீட்டி நிமிர்ந்து படுத்திருந்தார். கண்கள் மட்டும் திறந்திருந்தது. மற்றெல்லாம் அசைவற்றிருந்தது. என்னைக் கண்டதும் இலேசாகப் புன்னகைக்க முயன்றார். முகத்தில் பரவசம் பரவியது. என்னை இன்னும் அருகில் அழைக்க விழைகிறார் என்று விளங்கியது. கிட்டப்போய் குனிந்தேன். என் நெற்றியில் பெருவிரலால் சிலுவை அடையாளமிட்டார். இவர் எப்போதும் இப்படித்தான். வருசம் பெருநாள் திருநாள் நாள்களில் அவர் வீட்டுக்குப் போனால், தலை தடவி உச்சி மோர்ந்து நெற்றியில் சிலுவை அடையாளமிட்டுத்தான் அனுப்புவார். அவர் கரத்தில் எப்போதும் செபமாலை மணி உருளும்.

நான் வீட்டை நெருங்கும் போது எமது தெரு இருண்டிருந்தது. வீடும் வெளிச்சமற்று இருளாயிருந்தது. மனையாளின் குரல் பெரிதாய் ஒலித்தது: "அறுவானுகள்! காசு காசா வேண்டுவாங்கள்.. காசு கட்டப் பிந்தினால் கரண்ட் வெட்டி போடுவாங்கள். பொறுத்த நேரத்தில் திடீரெண்டு கரண்ட் இல்லாமல்

ஆக்கிப் போட்டாங்கள். மூதேசிகள். என்ன எங்கட பிரளுவான இன்னும் காண இல்ல. எத்தின நாளாச் சொல்லிக் கொண்டிருக்கிறன், ‘செற்று’க்குப் போய் மண்ணெண்ண வாங்கி வைக்கச் சொல்லி. நான் சொல்லுறத காதில விழுத்தினால்தானே. இப்ப விளக்கு எரிக்க எண்ண இல்லாம இருக்கு. எரியுற விளக்கு நூரப் போகுது. இந்தத் துலைஞ்சு போவான இன்னும் காணயில்லையே."

“சத்தம் போடாதணை அம்மா. அப்பா வாறார் போல கிடக்கு. அவர்ர காதில விழுந்திடப் போகுது”.

என் மனைவி இப்படித்தான் பொல்லாத வாய்க்காரி. நான் இல்லாத போதும்தான் இருக்கும் போதுந்தான், தனக்கு முரண்பாடாக நடந்தால் வாய்க்கு வந்தபடி திட்டுவாள். நான் ஒரு கதை கதைத்தால் ஒன்பது கதை எதிர்த்துக் கதைத்துப் போடுவாள். சரிக்குச் சரி வாய் காட்டுவாள்; அடி போட்டாலும் அடங்க மாட்டாள். வீணாகச் சண்டை பிடித்ததுதான் கண்ட பலன்? பிள்ளைகள் கதி கலங்கிப் போவார்கள். குடும்ப நன்மைக்காக இப்போதெல்லாம் என்ன பேசினாலும் நான் செவிடன் போல பேசாமல் இருந்து விடுவேன். இவள் வாயில் இருந்து, ‘தொலைவான்’, ‘பிரளுவான்’... என்ற வார்த்தைகள் அடிக்கடி வெளிவரும். எனக்கு இப்போது நடுத்தர வயதுதான். பிள்ளைகளுக்காக குடும்பத்துக்காக நான் ஆற்ற வேண்டிய கடமைகள் எவ்வளவோ உண்டு. அப்படியிருக்க தான் கஷ்டப்பட்டு தொல்லைப்பட்டாலும் விதவையானாலும் பரவாயில்லை என்று ஆத்திரத்தில் அறிவிழந்து எப்படியெல்லாமோ திட்டித் தீர்ப்பாள்.

நான் வீட்டை அடைந்ததும் விளக்கு மங்கலாக எரிந்து கொண்டிருந்தது. எண்ணெய் இல்லாமல் விளக்கு எரிய, படாத பாடுபட்டுக் கொண்டிருந்தது. இன்னும் சில நிமிடங்களில் அது அணைந்துவிடும் போலிருந்தது. மனைவியின் ஆத்திரத்திலும் நியாயம் இருக்கத்தான் செய்கிறது. இன்னும் சற்று நேரத்தில் அணைந்துவிடும்; இருள் சூழ்ந்துவிடும். மனைவி வாயிலிருந்து சொல்லம்புகள் பறக்கும்.

நல்ல வேளை திடீரென்று மின்விளக்குகள் எரிந்தன. மின்சாரம் வந்துவிட்டது. பெரும் ரகளை தவிர்க்கப்பட்டது. மின் ஒளியில் ஒரு காட்சியைக் கண்டு அதிசயித்தேன்; பரவசமானேன்.

என் தாயார் ஒரு மூலையில் குந்திக்கொண்டிருந்தார். அவர் எப்போது என் வீட்டுக்கு வந்தார்? ஏன் வந்தார்? என்று கேள்விக் குறியுடன் அவரைப் பார்த்தேன். ஏனென்றால், என் தங்கை வீட்டில்தான் அம்மாவும் அப்பாவும் இருக்கின்றனர். தங்கை வீடு மூன்று வீடு தள்ளி இருக்கிறது. தங்கைதான் அவர்களை பராமரிக்கும் பொறுப்பை எடுத்துக் கொண்டாள். அப்படியிருக்க அம்மா ஏன் திடீரென்று இங்கு வந்தார் காரணம் புரியவில்லை. ஆனால்

என் மனைவியின் ஆத்திரம் இரட்டிப்பானதுக்கு இப்போது காரணம் புரிந்து விட்டது.

அம்மாவை அணுகி மெல்ல விசாரித்தேன். “அவனோட நிம்மதியா இருக்கேலாம கிடக்கு. குடிச்சுப் போட்டு வந்து கேளாக் கேள்வி கேட்கிறான். வீடு வளவ தங்கட பேரில எழுதட்டாம். இல்லாட்டி இங்க இருக்க வேணாமாம். எங்கள் இரண்டு பேரையும் எங்கையெண்டாலும் போய் தொலையட்டாம். குடிக்கிறதுக்குக் காசில்லயெண்டு என்ர காதுத் தோட்டக் கேட்டு தூசணங்களால பேசுறான். இவன்ர கரைச்சல் தாங்கேடலாமல்தான் இங்கால வந்தநான். கொஞ்சநாள் இங்க இருப்பம் எண்டு வந்தன் மன ஆறுதலுக்கு”.

தங்கை புருசன் குடிக்கு அடிமையானவன். குடிக்காக எதையும் பேசுவான்; எதுவும் செய்வான். அம்மாவும் அப்பாவும் தங்கள் பாரம்பரிய வீடு வளவை தங்கை பேரிலேயே எழுதினர். ஆனால் சீவிய உருத்து வைத்தே எழுதினர். அவர்கள் காலத்துக்குப் பின்னர்தான் தங்கை குடும்பத்தை சொத்து சேரும். மருமகனின் குணமறிந்து முன்னேற்பாடாக இப்படிச் செய்துவிட்டனர். அவர்கள் பேருக்கு எழுதியிருந்தால் எப்போதோ ஈடுவைத்தோ அறுதியாகியோ விற்றோ பறிபோயிருக்கும். முழுவதுமாக தங்கள் பேரில் எழுதச் சொல்லி மருமகன் கொடுக்கும் நெருக்குவாரம் ஏச்சு பேச்சு தூசணை தாங்கமாட்டாமல்தான் இங்கே வந்திருக்கிறா. அப்பா மிகவும் பலவீனப்பட்டுப் போனார். அவர் ஒன்றும் வாய் திறக்கமாட்டார். எல்லாம் அம்மாவோடுதான்.

பெற்றோர் தங்கை வீட்டில் இருந்தாலும் தங்கையின் பராமரிப்பில் வாழ்ந்தாலும், செலவுக்கு வைத்தியத்துக்கு நான்தான் பொருளுதவி செய்து வருகிறேன்.

அம்மாவுக்கு தன் மருமகளின் - என் மனைவியின் குணாம்சம் ஓரளவு தெரியும். அது மூன்றாம் நாளே நன்கு தெரியும்படி ஆகிவிட்டது.

ஒருநாள் அம்மா இப்படிச் சொன்னா: “உடம்பெல்லாம் சரியான கடியாயிருக்கு உடுத்தியிருக்கிற சீலையும் அழுக்காயிருக்கு. குளிக்க வேணும் போல இருக்கு”

இதைக் கேட்டுவிட்ட என் மனைவி தன்னை கையைப் பிடித்து குளியலறைக்கு கூட்டிச்செல்வா என்றுதான் அம்மா எதிர்பார்த்தா. ஆனால் என் மனைவி அம்மாவின் கையைப் பிடித்து என் தங்கை வீட்டில்தான் கொண்டு போய்விட்டு வந்தாள். தங்கை பிள்ளைகளோடு கணவனோடு அல்லுத்தொல்லைப் பட்டாலும், தாய் தகப்பனுக்கு செய்ய வேண்டிய கடமைகளில் ஒரு குறையும் வைப்பதில்லை. என்றாலும் நானும் இடைக்கிடை என்றாலும் அங்கு போய் அவர்களை பார்த்து ஆகவேண்டியவற்றை நிறைவேற்றுவதில் பின் நிற்பதில்லை.

அப்பா சனிக்கிழமைகளில் நல்ல முழுக்குப் போடுவார். நான் அன்றைய தினம் காலையில் அங்கு போவேன். என்னைக் கண்டதும் அம்மா கைத்தாங்கலாக அவரைப் பிடித்து கூட்டிவருவா. கிணற்றடிப் பக்கமாக ஒரு கதிரையில் இருத்துவார். நான் முதல் வேலையாக அவர் முகத்தில் சவர்க்காரத்தை பூசி சவரம் செய்து விடுவேன். அம்மா முன்னால் நின்று கண்காணித்தபடி இருப்பார். சரி பிழைகளை சொல்லிக் கொண்டிருப்பார். முக அலங்காரம் முடிந்ததும் தங்கையின் குரல் கேட்கும். நான் அங்கு போனதும் பெரிய பானையில் கொதிநீர் கொதித்துக் கொண்டிருக்கும்; ஆவி பறக்கும். நானும் தங்கையுமாக அதை தூக்கிக் கொண்டு வருவோம், நான் தண்ணீர்விட்டு கலப்பேன். அம்மா கையை விட்டுப் பார்த்து, “இன்னும் விடு தண்ணிய மனுசனுக்கு தோலுருஞ்சி போகப் போகுது” என்பார்.

அம்மா குசினிக்குப் போய் சிகைக்காய் வெந்தயம் போட்டவிச்ச பாத்திரத்தோடு வருவா. நன்றாக தலை தேய்த்து, உடம்பு முழுக்கத் தேய்த்து நீராடல் நடக்கும். எல்லாம் அம்மாவின் மேற்பார்வையோடுதான். நீராடல் முடிய அவ தோய்த்துவர்ந்த உடுப்புகள கொண்டுவருவார்.

வேப்பமர நிழலில் சாக்குக் காட்டில் இவருக்காகவே காத்துக் கொண்டிருக்கும். இருவருமாக நடத்திச் சென்று அப்பாவை அதில் படுக்கவிடுவோம். அம்மா சுருட்டையும் நெருப்பெட்டியையும் நீட்டுவார். அப்பா படுத்துக்கொண்டு புகை விடுவார். அப்போது அவர் முகம் பரவச நிலையில் இருக்கும். அந்தப் பரவசம் அம்மாவையும் தொற்றிக் கொள்ளும். ஒரு கதிரையில் அவருக்கு முன்னால் வெற்றிலைத் தட்டோடு இருந்து கொண்டு சிரித்துச் சிரித்து கதை பேசிக் கொண்டிருப்பா அம்மா. அப்பா புகைவிட்டபடி இரசித்துக் கொண்டிருப்பாரர்.

இரவிலும் படுக்கைக்குப் போகும் வரையிலும் இவர்கள் இப்படித்தான். மாலையானதும் இருவரும் ஆண்டவர் படத்துக்கு முன்னால் நின்று கனநேரமாக செபம் சொல்லிப் பிரார்த்திப்பார்கள். இரவு நித்திரையாகுமட்டும் குசுகுசு பேச்சும் சிரிப்பும்தான். இப்படியே இருக்கையில் ஒருநாள்..

காலைநேரம் எட்டு மணியிருக்கும் தங்கை மகள் பதகளிப்போடு ஓடிவந்தாள். “மாமா.. மாமா கெதியா வந்து பெற்றப்பாவப் பாருங்க. காலையில இருந்து எழுந்திருக்க இல்ல. கண்ணை மூடிக் கொண்டிருக்கிறார்”. இதை அழுது கொண்டு சொன்னாள்.

நான் மிகவும் பரப்பாகினேன். மிக்க கலக்கத்தோடு அங்கு சென்றேன். மனைவி பிள்ளைகளும் பின்னால் ஓடி வந்தனர். அப்படி நடக்குமென்று நான் சிறிதும் எதிர்பார்த்திருக்கவில்லை. ‘ஆண்டவரே அப்படி ஏதும் நடந்துவிடக் கூடாது’. ஆனால் என் வேண்டுதல் பலிக்கவில்லை. அப்பா மரணித்துத்தான் போனார். அம்மா மௌனமாக கண்ணீர் வடித்துக் கொண்டிருந்தார். என்

தங்கையும் பிள்ளைகளும், என் மனைவி பிள்ளைகளும் பெரிதாக அலறி கத்தினர்.

இறுதிச் சடங்கு முறைப்படி நிறைவேறியது. சுவாமியார் வந்து செபித்து ஆசிர்வதித்தார். சவம் இன சனங்கள் புடைசூழ சவக்காலைக்குப் போனது. இத்தனை இறுதிக் கிரியைகளின் போதும் அம்மா பெரிதாக கத்தி குழறவில்லை. கரம் கூப்பி மௌனமாகவே வழியனுப்பி வைத்தார். இது எனக்கு ஆச்சரியமாகவே இருந்தது.

நான் சேமக்காலைக்குப் போய் நல்லடக்கம் செய்து விட்டு இனசனங்களோடு வீடு திரும்பினேன். அம்மாவின் முன் போய் நின்றேன். அவ என் கரம் பற்றி கூறிய வார்த்தைகள் என்னை மேலும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியது.

“மகன், இதைத்தான் நான் ஆண்டவரிட்ட வேண்டிக் கொண்டிருந்தேன். அது மாதிரியே நடந்து முடிஞ்சுது. என்ர கண்ணோட என்ர புருசன் போயிர வேணும். அவருக்கு செய்ய வேண்டிய கடைமைய எல்லாம் செய்து அவர வழியனுப்பி வைச்சுப் போட்டுத்தான் நான் போய் சேர வேணும். நான் முந்திச் செத்து என்ர புருசன் தனியக் கிடந்து உத்தரிக்க நான் விடமாட்டன்”!!!

# சோகம் நீங்கி சுகம் பெறவே

வரப்பு மேலே கால் பதித்து
வயற்காட்டில் போறவளே
நீர் நிரம்பி வழிந்திருக்கு
நின்று பாத்து போ கிளியே

தலைமேலே கொடமிருக்கு
தடுக்கிவிட்டால் செதறிவிடும்
மழைகாலம் இதுவன்றோ
மச்சி நீ தனியா தவிக்கிறியே

பருவம் கொண்ட நற்கதிர்கள்
உன் உருவம் போல சிவந்திருக்கு
பருவப் பொண்ணு ஒன் அழகை
பருகி நெலம் பாத்திருக்கு

கருவண்டு விழிகளிலே பெரும்
கலக்கமென்ன சொல் கிளியே
அருகில் வேறு யாருமில்லை வீண்
அச்சம் கொண்டு சாகிறியே

சூடு மிதிக்க துணை இருப்பேன்
சுற்றிவரக் காவல் நிற்பேன்
ஓடை மறித்து மீன் தருவேன்
என்னை பாத்து சிரிச்சியெண்டால்

காட்டு வெள்ளம் போல ஒன்மேல்
காதல் எனக்கு பெருகுது
கேட்டு வாறன் ஒன்ன
ஒன் சம்மதத்தைச் சொல்லிவிடு

தாகம் கொண்ட மனசோடு
தவித்து நானும் காத்திருக்கேன்
சோகம் நீங்கி சுகம் பெறவே
ஒன் தலையசைப்பை பாத்திருக்கேன்!!!

**பீ.ரீ. அஸீஸ் – கிண்ணியா**

# நிறுவனங்களில் தலைமைத்துவம்

தலைமை ஏற்பவர் நம்பிக்கைக்குரியவர் ஆயிடின்
தகைமை சார்ந்தவர் என்று அனைவரும் ஏற்றிடுவர்
விசுவாசம்கொள்ள ஆகாதவர் எனக் காணிண்
விவஸ்தையில் சிக்கியே தலைவர் திண்டாடுவர்

தலைமைத்துவம் அகன்றிட அவர் பண்பே காரணமும் ஆயிடும்
விலைமதிக்கவொண்ணா ஆட்சித் தலைமைக்கும் அதே கதிததான்
நிறுவனத் தலைவர் தம் சேவகர் மதிப்பைப் பெற்றிடல் அவசியம்
நம்பிப் பிறர் அணையப் பொருத்தமானவர் ஆதல் முதற்கடனாம்

தலைமையின் முதற் பண்பு மக்கட் சேவகன் எனும் கோட்பாடே
தகைமை அமைந்திட மற்றும் ஓரியல்பு இறையச்சம் கொள்ளல்
தலைமையேற்கும் துறையில் தேர்ச்சி பெற்றிருத்தலும் முதற்கடமை
தக்கோனாய்ச் செயலாற்றிட இவ்விடயங்கள் அடிப்படையாகும்

நம்பிக்கை நாணயம் நேர்மை கொண்ட தலைவர்
நற்சான்று பெற்று உயர்வடைந்து மிளிர்ந்திடுவார்
நிறுவனத்தையும் உயர்நிலைக்கு இட்டுச் சென்றிடுவார்
நற்சேவகராய் அங்குள்ளோர் நடந்திடலும் காண்கின்றோம்

தலைமையில் நம்பிக்கையீனம் சந்தேகம் வலுத்திடின்
நலமாய் பதிற்கடமை செய்ய எவருமே முன்வரார்
நிதிநிலை சீராக ஒழுங்குடன் பரிபாலித்தல் நிதமும்
நிறுவன ஒழுங்கிற்குப் பிரதானமாய் அமைவதொன்றன்றோ

நிறுவன நியமங்களைத் தவிடுபொடியாக்கிடின் தலைமை
நற்பேரிழந்து நிறுவனமும் சீர்குலைந்து கீழ்ப்பட்டிடுமாம்
அரச அலுவலகம் மற்றும் நிறுவனங்களில் எல்லாம் இந்நியதி
அப்பட்டமாய் அமைவதை நிதர்சனமாய்க் காண்கின்றோமே!!!

**வெலிப்பன்னை அத்தாஸ்**

# இலக்கிய அனுபவ அலசல் 22

கவிஞர் ஏ.இக்பால்

**கலை இலக்கிய ஈடுபாடு உடையோரும் கலை இலக்கிய ஆய்வு செய்வோரும் அறிந்திருக்க வேண்டிய முக்கிய விடயங்கள் பல குறிப்பிடப்பட்டுள்ளன. அறியத் தேவையானோர்களுக்குரிய விடயங்கள் தொடர்கின்றன.**

1. இலக்கியத்தில் உத்திகள் பல உள்ளன. (அ). இயல்பு நவிற்சி - ஸ்ரீம் ஒவ் கொன்சய்னஸ், (ஆ) பின்னோக்கல் - பிளஸ்பேக், (இ) உப பாத்திரம் மேலெழல் - ரிங்லேடன் டெக்னிக் இவ்விதம் பல உத்திகளைக் கையாண்டு கவிதை, சிறுகதை, நாவல், நாடகம் வெளிவந்துள்ளமையை அவதானித்தல் அவசியம்.

2. உருவம், உள்ளடக்கம் அதாவது வடிவம், கருத்து என்பன படைப்பிலக்கியத்தில் முக்கியம் பெறுகின்றன. இலக்கியத்தின் அடிப்படைப் பொருள்தான் வாசகனைக் கவர்ந்திழுக்கும். வாழ்க்கை அனுபவம் இல்லாமல் இயற்கை அழகில் ஈடுபாடு கொள்ளாமல் கவிதையோ, ஏதோ ஒரு படைப்போ ஆக்குபவன் மக்களை ஈர்ப்பதற்கு எண்ணிவிட முடியாது.

3. வாழ்க்கையின் ஆழ்ந்த உண்மைகளைக் கவிஞர்கள் - புலவர்கள் சொன்னதுபோல் எவரும் சொல்லவில்லை.

ஆடுநனி மறந்த கோடுயர் இடுப்பின்...- புறம் 164

3.1 'வீட்டில் அடுப்பெரியவில்லை. சமையல் செய்யவில்லை. பசியோடு இருந்த என் மனைவி எப்படிப் பிள்ளைகளுக்குப் பால் கொடுக்க முடியும்? முலைக்காம்பின் கண்கூடத் தூர்ந்துவிட்டது. முலையைச் சுவைத்துப் பால் வராததால் பிள்ளை அழுகிறது. மனைவி என்னை நோக்க நான் உன்னிடம் வந்தேன்' என்கிறார் புலவர். வாழ்க்கையின் இன்பக்கூறு, துன்பக்கூறு இரண்டையும் அடக்கி நிற்பதை இங்கே காணலாம்.

4. உள்ளதை நயம் படக் கூறும் தன்மை மிக முக்கியமானது.

4.1 உண்மை பழமையாகவும் பொதுமையாகவும் புதுமையாகவும் இருப்பது முக்கியமானதே!

5. பேரிலக்கியங்களின் கருப்பொருள் வாழ்விலே மறக்க முடியாத தன்மையை முன்வைக்கும்.

5.1 கருப்பொருளின் உண்மை மனித வாழ்வின் கூட்டத்தோடு தொடர்பு உள்ளதாயிருக்கும்.

5.2 எல்லாக் கலைகளின் நோக்கம் சிந்திக்கத் தூண்டுவதன்றிப் பின்பற்றத் தூண்டுவதில்லை.

6. வெறும் கற்பனையும் உணர்ச்சியுமுள்ள இலக்கியம் வாழ்வதில்லை. பொருள் பொதிந்திருக்கும் இலக்கியம் என்றும் வாழ்ந்து நிற்கும். கவிஞன் தான் எடுத்துக்கொண்ட பொருளைத் தெளிவாகச் சொல்ல வேண்டும். அதுவும் திட்டமாகச் சொல்ல வேண்டும். பொருளைச் சுட்டிக்காட்டும் முறையில் சொல்லுதல் அவசியம்.

7. உணர்ச்சிக் கருத்துகளை மற்றவர்களுக்கு எடுத்துக்காட்டக் கையாளும் எல்லா முறைகளையும் இலக்கிய வடிவம் ஏற்று கூறுவதில் தப்பில்லை.

7.1 உண்மை உணர்ச்சியை வெறும் எலும்புக்கூடு எனலாம். உண்மை உணர்ச்சிக்கு உருவம் கொடுத்து நடமாடச் செய்வது இலக்கிய வடிவம்தான்.

7.2 இலக்கிய அமைப்பை உறுதியாகக் கூறுவதே இலக்கிய வடிவம் எனலாம்.

8. உணர்ச்சி, கற்பனை, கருத்து என்பன உயர்ந்த முறையில் அமைந்து, வடிவ அமைப்பில் இசைவு ஏற்பட்டால் மூன்று கூறுகளும் நல் விளைவுகளைக் கொண்டு வருமா? என்பது கேள்வியே.

8.1 பாட்டு எப்படி அமைய வேண்டும் என்பதைத் தீர்மானிப்பது பாட்டு எழுதுபவருடைய வேலை. யாப்பு பற்றிக் கூறுவது வடிவத்தின் வேலை.

9. சிறந்த கற்பனைகளையும், உணர்ச்சிகளையும் காட்டும் நிலைக்களன்தான் வடிவம் எனலாம்.

9.1 உணர்ச்சி, கற்பனை? கருத்து உயர்ந்திருக்கும்போது வடிவம் உயர்ந்திருந்தால் அவ்விலக்கியம் சிறப்படையும்.

9.2 கலையின் நன்மை, தீமை அதன் வடிவத்தைச் சார்ந்துள்ளன. கலையின் உயர்வு, தாழ்வு அதன் வடிவத்தைச் சார்ந்து நிற்பதில்லை.

10. படைப்பாளியின் நடை செறிவாகவும் தெளிவாகவும் இனிமையாகவும் இருத்தல் அவசியம். எளிமையான நடை சிறந்தது. அது மக்கள் மத்தியில் எளிதில் பரவும். பக்தி இலக்கியங்கள் மக்களைக் கவர்வதற்குக் காரணம் இதுதான்.

11. படைப்பாளி கையாளும் சொற்கோர்வையில் அவனது புலமை வெளிவரும்.

11.1 கவிதைகளை அந்தந்த மொழியிலேயே படிக்க வேண்டும்.கம்பனைத் தமிழில், காளிதாசனை சமஸ்கிருதத்தில், ஷேக்ஸ்பியரை ஆங்கிலத்தில் படித்தல் அவசியம்.

(தொடரும்)

# நானும் அன்றைய பகலும்

உனக்காக
பரமேஸ்வரச் சந்தியின்
பஸ் நிலையத்தில்
காத்திருக்கிறேன்..

என் ஊரை நிராகரித்துவிட்டு
முந்தைய பஸ் நிலையத்திலே
இறங்கிக்கொண்டதாய்
கைத்தொலைபேசியில்
அழைத்துக் கூறுகிறாய்..

பஸ் நிலைய இருக்கையிலே
கண்கள் பொங்க
அமர்ந்திருக்கிறேன்..

நீ வந்த பஸ்
என் மனதின் மீது ஏறி
ஊர்ந்து ஊர்ந்து பயணிக்கிறது!

மாலையை
இரவு ஆக்கிரமிக்கிறது..

யாதொன்றும் தோன்றாமல்
எம்மீது படியும் இருளை
அனுமதித்து அமர்ந்திருக்கிறேன்!

கொஞ்சம் கொஞ்சமாய்
ஆக்கிரமிக்கும் இரவில்
பகலைப் போலவே
நான் தொலைந்துவிட்டேன்!

வீதியிலே பேருந்துகள்
அழுதுகொண்டே
கடந்து செல்கின்றன!!!

**ஆ. முல்லை திவ்யன்**

# ஊனம்

## சிறுகதை

மல்லவப்பிட்டி சுமைரா அன்வர்

ஐயோ இந்த அம்மாவுக்கு எப்படிப் புரிய வைப்பேன் எந்நிலையை! மறுமணமா? எனக்கா? நினைக்கவே நெஞ்சம் வெடிக்கிறதே. என்னுயிர் 'திஸ்ஸ' ஒளிவீசும் இதயத்துக்குள் இன்னொரு நபர் குடிபுகுவதா? ஜீரணிக்க முடியவில்லை. என் மனப் போராட்டம் யாருக்கும் புரியவில்லை. என் வாழ்க்கைதான் எப்போதோ முடிந்துவிட்டதே. அணை கடந்த வெள்ளம்.. இனி சாண் ஏறியென்ன முழம் ஏறியென்ன என்ற விரக்தி என்னை வாட்டிட இறந்த காலத்தை எண்ணி என் மனம் பெருமூச்சுவிட கண்களில் கங்கை கரை புரண்டோடியது.

பல்கலைக்கழகத்துக்கு நான் அடியெடுத்து வைத்த முதல்நாள் நான் முதன்முதலில் சந்தித்த வதனம்.. முதலில் உச்சரித்த நாமம்.. திஸ்ஸ. முதல் சந்திப்பிலேயே என்னிதயத்துள் மின்னல். தங்கள் வரவு நல்வரவாகுக.. என்றெல்லாம் சுலோகங்கள் தாங்கி எம்மை அன்பாய் ஆரவாரமாய் வரவேற்ற தலைவர்களின் பெருந்தன்மையை அடுத்தநாளே அனுபவத்தில் கண்டோம். ஆமாம்! ரேக்கிங் வேள்வியின் ஆகுதிகளாய் நாம் ஆகி.. தீயில் கருகிக் கொண்டிருக்கும் போதெல்லாம் என்னைக் காப்பாற்றி.. பத்திரமாக ஹொஸ்டலுக்கு அனுப்பியவர் திஸ்ஸ.. இந்த நெருங்கிய நட்பு அன்புப் பிணைப்பாகி.. காதலாகி கசிந்துருகியபோது நாம் வெவ்வேறு மதத்தைச் சார்ந்தவர்கள் என்பது எமக்கு பொருட்டாகவே படவில்லை. காதலென்பது பிளவுகளை வேற்றுமைகளை எல்லாம் கடந்த தவமோ என்னவோ?

காலம் உருண்டோட பல்கலைக்கழக வாழ்க்கையும் முற்றுப் பெற்றது. நானும் திஸ்ஸவும் பல மாதங்களாக யோசித்து ஒரு முடிவுக்கு வந்திருந்தோம். அதாவது வளாகத்திலிருந்து வெளியேறும் நாம் வீடுகளுக்குச் செல்வதில்லை. எமது நெருங்கிய நண்பர்களின் உதவியோடு பதிவுத் திருமணம் செய்துகொண்டோம். விடயத்தை இரு வீட்டாருக்கும் அறிவித்தோம். இரு வீடுகளிலும் எதிர்ப்பு குண்டு மழையாய் பொழியும் நேரம் நாம் கண்டியிலே தனி வீடொன்று வாடகைக்கு வாங்கி அதில் குடியிருந்தோம். ஏற்கனவே திஸ்ஸ வேலை பார்த்து வந்ததால் வருமானம் போதியதாக இருந்தது. இனியென்ன? யார் எதிர்த்தாலும் யார் ஆசீர்வாதிக்காவிட்டாலுமென்ன.. எமது குருவிக் கூட்டில் காதல் நிரம்பி வழிந்தது.

வாழ்க்கையென்றால் இதுதான் வாழ்க்கை. திஸ்ஸ என்மேல் உயிரையே வைத்திருந்தார். நானும்தான். எந்தத் தொல்லைகளும் இல்லாமல் நாமே உலகம்.. உலகமே நாமாக வாழ்ந்துகொண்டிருந்தோம். சாதி.. சம்பிரதாயம்..

எல்லாம் பொய்.. உள்ளங்களின் பிணைப்பே மெய்! என்பதை அனுபவத்தில் கண்டோம். உலகமே எங்களைப் பின்பற்றினால் எவ்வளவு நன்றாக இருக்கும்?

எங்களுக்கு வீடு.. சுற்றம் இருப்பதை முற்றாக மறந்தோம். நாமாக எமக்குள்ளே உலகை சிருஷ்டித்துக்கொண்டு எம் குழந்தைகளுக்காக.. எம் எதிர்காலத்துக்காக கனவுகளைச் சுமந்துகொண்டு நிகழ்காலத்தின் இன்பங்களை எல்லாம் நாமே சுவீகரித்துக்கொண்டோம். எமக்கு வாய்த்த அபூர்வ ஜோடிப் பொருத்தம் கண்டு நம்மை நாமே வியந்தோம். காலம் தேனாகி.. கலண்டர் மூன்று தாள்களை உதிர்த்தது.

ஒருநாள் திஸ்ஸ ஆபீஸுக்குப் போனவர் திரும்பி வரவேயில்லை. நான் துடித்துப் போனேன். தேடினேன். தேடலின் முடிவு பஸ் விபத்தில் திஸ்ஸ பலியாகியதாய் அறிந்தேன். நான் மூர்ச்சித்து விழுந்தேன். நண்பர்கள் ஒரு வாரம் ஆதரவாக என்னோடிருந்து துக்கத்தைப் பகிர்ந்துகொண்டார்கள். அதன் பின்னர் அவரவர்களின் வேலைகளுக்காக திரும்பிச் சென்றுவிட்டார்கள். நான் தனிமையில் விடப்பட்டேன். என் வாழ்க்கைத் துணையை சடுதியாக காலன் பறித்துக்கொண்டான். இதற்குத்தானா இத்தனை மகிழ்ச்சியை எனக்குத் தந்தான்? இதற்குத்தானா எம் காதலை வெற்றியாக்கினான்? ஐயோ தி..ஸ்..ஸ நீங்கள்தான் உலகம் என்றிருந்தேன். நீங்களில்லாத வாழ்க்கையை என்னால் நினைத்துப் பார்க்க முடியவில்லை. அழுதேன்.. அழுதேன்.. வீடே சூன்யமானது.

மூன்று மாதங்களாக நினைவுக்கு வராத எனது தாயின் எண்ணம் எனக்குள் பல தடவைகள் வந்துபோயின. காரணத்தோடும் காரணமின்றியும் அழுகை அழுகையாய் வந்தது. சிறகைக் கொடுத்த இறைவன் பறக்கும்போது துண்டித்துவிட்டான். நானிருக்கும் வீட்டுக்கு ஒரு வருட வாடகை செலுத்தியிருப்பதாலும் திஸ்ஸவின் அலுவலகத்தால் ஒருதொகை நட்டஈடு தரப்பட்டதாலும் இன்னும்' கொஞ்ச காலம் இப்படியே இங்கேயே இருந்துவிடலாம். அதற்குப் பிறகு..? எதையும் சிந்திக்கப் பிடிக்கவில்லை. வீட்டுக்குச் சென்றால்.. நினைக்கவே ஒருமாதிரியாக இருந்தது. எந்த முகத்துடன் அவர்களை விளிப்பது?

காலம் நத்தை வேகத்தில் ஊர்ந்தது. என் வாழ்வு பாழாய்ப் போனது. திக் பிரமை பிடித்தவள் போல நானாகி.. எதிலுமே பிடிப்பில்லாமல்.. யாருக்கும் தலைகாட்ட முடியாமல் ஒதுங்கிக்கொண்டேன். திடீரென ஒருநாள் கோலிங்பெல் ஒலிக்க.. கதவைத் திறந்தேன். என் பெற்றோர்!

அவர்களைப் பார்த்ததும் ஸதம்பித்து நின்றேன். என்னருகே வந்தவர்கள் என்னை ஆரத்தழுவிக்கொண்டார்கள். தாழ்ப்பாள் போட்டிருந்த உணர்வுகள் பரிவைக் கண்டதும் பீறிட்டுப் பாய்ந்தன. கண்களோ அருவியை தோற்றுவித்துக்கொண்டிருந்தன. அவர்களும் அழுது தீர்த்தார்கள். மௌனமே

பாவையானது. என் தாய் என் தலையை வருடிக்கொண்டிருந்தார். என்னகத்துள் ஒரு பிரளயமே வந்து போனது. இத்தகைய பரிவையும் பாசத்தை இழக்க நான் எப்படித் துணிந்தேன்? உதாசீனப்படுத்தியும் என்னைத் தேடி வந்திருக்கிறார்கள். பெற்ற மனம் பித்து என்பது இதுதானா?

பொழுது யாருக்காகவும் காத்திருக்கவில்லை. அப்பாவே மௌனத்தை கலைத்தார். வீணாண பிடிவாதங்கள் யாருக்கும் பயனில்லை என்று கூறி வீட்டுக்கு அழைத்துச் சென்றார். வீடு வந்து சேர்ந்து மூன்று வருடங்கள் கடந்துவிட்டன. இயல்பான வாழ்க்கைக்கு நான் திரும்புவது சிரமமாக இருந்தது. என் பெற்றோர் என் மனதை திசைதிருப்புவதற்காக புத்தகங்கள்.. பரிசுகள்.. உடைகள்.. நகைகள்.. என்று ஏராளம் அள்ளிக் கொட்டினார்கள். இவை எதுவுமே என் திஸ்ஸவின் நினைவுகளை இல்லாதொழிக்கவில்லை. இதை அறிந்தவர்கள் என்னை என் போக்கில் கொஞ்சகாலம் விட்டுவிட்டார்கள்.

**********

காலம் மேலும் இரண்டு வருடங்களை உதிர்த்துவிட்டது. அம்மாவுக்கு இரண்டாவது ஹார்ட் அட்டாக்கும் வந்துபோனது. அதன் பிறகுதான் மறுமணப் பேச்சு பற்றி நச்சரித்த வண்ணமே இருந்து இன்று அது தொல்லையாகிப் போனது. ஏற்கனவே என்னால் நொந்திருந்த அந்த விளக்கு என்னால் அணையாதிருப்பதற்காக நானும் மறுமணத்துக்கு சம்மதித்தேன். அதாவது ஊனமான ஒருவருக்குத்தான் வாழ்வளிப்பது என்ற ஒரு நிபந்தனையோடு..

அந்த முடிவுக்கு வந்தபோது நானே ஆடிப்போனேன். பெற்றோரின் பூரணமற்ற சம்மதத்தோடு அதை செய்துவிட்டேன். அவர் போலியோவால் பாதிக்கப்பட்டவர். நன்கு படித்தவர். அவரது அலுவலகத்தால் வாகன வசதியும் இருப்பதால் எங்கள் வாழ்க்கை சீராகச் சென்றது. மகன் தினேஷ் பிறந்ததும் என் மனம் சற்று ஆறுதலானது உண்மைதான். மகனின் வரவால் பூரித்திருந்த நான் அந்த பூரிப்பை முழுதும் அனுபவிக்குமுன் அடுத்தடுத்தும் சோதனைகள் என்னைத் தாக்கின. அம்மா மூன்றாவது ஹாட் அட்டாக்கில் மீளாத்துயில் கொண்டார். அதைத் தாங்க முடியாது சிறிது சிறிது குற்றுயிராகி அப்பாவும் அம்மாவைத் தொடர.. இது போதாதென்று இவரது ஆபீஸ் மூடப்பட்டுவிட வாழ்க்கைப் போராட்டத்தில் சிக்கிக்கொண்டேன்.

வேலைக்கு மனு போட்ட போதும் எதுவும் கைகூடாத நிலையில் டியூஷன் வைத்து நாளைக் கடத்தினேன். தினேஷுக்கு இரண்டு வயதான பின் மகள் விஜி பிறந்தாள். அவள் என் கணவரை உரித்து வைத்தாற் போலிருந்தாள். ஆனால்.. அது கூட பொறுக்கவில்லையோ என்னவோ விஜி வளர வளர அவள் பாதங்கள்.. ஐயோ இது என்ன கொடுமை? அவள் தோற்றத்தில் மட்டுமல்ல.. போலியோவினாலும் என் கணவரைப் போலவே பாதிக்கப்பட்டருந்தாள். அந்தப் பேரிடியை என்னால் தாங்கிக்கொள்ளவே

முடியவில்லை. வாழ்க்கையில் சோதனைகள் வரத்தான் செய்யும். எனக்கு சோதனையே வாழ்க்கையாகிப் போனதே.

என் குற்றங்களுக்காக என் மகள் தண்டனை பெற்றாளா? நான் என் பெற்றோரை அழ வைத்தேன். நான் அழுவதற்கு மகளை ஊனமாக்கினானா அந்த இறைவன்?? அழுதேன். அழுது தீர்த்தேன். அழுவதால் மனப்பாரம் குறைகிறதே தவிர வாழ்க்கைப் பாரம் குறையவில்லையே. மனதைத் திடப்படுத்திக்கொண்டேன். சவால்களைச் சமாளிக்கும் போராட்டத்துக்குத் தயாரானேன். மனம் ஊனமாகாமல் பார்த்துக்கொண்டால் அதுவே பெரிய விடயம்தான்.

மகளுக்காக மட்டும் அழுது தீர்ப்பதைவிட்டு மகளை நல்ல நிலைக்கு கொண்டுவர திடங்கொண்டேன்!!!


## வாசகர் கவனத்திற்கு

சந்தாதாரராக இணைந்துகொள்ளுங்கள். அது பூங்காவனம் சஞ்சிகை தொடர்ந்து வெளிவருவதையும், கிடைப்பதையும் உறுதி செய்யும். சந்தாதாரராக இணைந்து கொள்பவர்கள் ஆகக் குறைந்தது 600/= ரூபாவை சந்தாவாக செலுத்தவும். பக்கச்சார்பற்ற முறையில் எழுதப்பட்ட, தெளிவான கையெழுத்தில் அமைந்த, இதுவரை பிரசுரமாகாத (சிறுகதைகள், இலக்கியக் கட்டுரைகள் A4 தாளில் 03 பக்கங்களுக்குள்) ஆக்கங்களையே பூங்காவனம் எதிர்பார்க்கிறது. பூங்காவனம் இதழில் விளம்பரங்களைப் பிரசுரிக்க மற்றும் கொடுப்பனவுகள், சந்தா, விற்பனை முகவர்களின் தொடர்புகள் ஆகியவற்றுக்கு 077 5009222 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்!

**ஆசிரியர்**

வாசகர் கவனத்திற்கு!

தாங்கள் அனுப்பும் படைப்புக்களை தட்டச்சு செய்து மின்னஞ்சல் வாயிலாக அனுப்பி வைப்பின், பூங்காவனம் விரைவாக வெளிவர அது பேருதவியாயிருக்கும். ஆதலால் தயவுசெய்து மின்னஞ்சல் செய்ய முடியுமானவர்கள் இதை கருத்தில் கொள்ளுமாறு அன்பாக வேண்டுகின்றோம்.

# சந்தேகம் நீக்கு

சந்தேகம் என்னும் நோய் புற்று
சடுதியிலே தொற்றுவிடும் சற்று
சபல நினைவூட்டி
சண்டையினை மூட்டி
கலகத் தீ எரிந்தெங்கும் பற்றும்

உள்ளம் வேண்டுண்மை பல கொல்லும்
உகப்புறவை நட்புகளைத் தள்ளும்
நலவுகளை நீக்கி
நன்மை வழி போக்கி
நீங்கிவிடா வளர்ந்து அது செல்லும்

கண்காணா வாந்தியினால் கோபம்
கருத்துணர்வறியா மனம் வேகும்
புண்ணாக்கி நெஞ்சில்
புன்மைச் செயல் நஞ்சைத்
தூவியதால் பகை தொடர்ந்து போகும்

**மருதூர் ஜமால்தீன்**

சம்பவத்தைக் காண்கில்லார் கூற்றை
சீர்வழியாய் நம்பாதே கேட்டு
விசாரித்தால் நீதி
வினை செய்தல் நாதி
உண்மை வரும் தாமதித்தே சாற்று

சத்தியத்தை சந்தேகம் நீக்கும்
சாந்திவழி பொறுமைப் பணி போக்கும்
சால்புடையோர் வாக்கு
சார்ந்துயிதை ஊக்கு
சமுகத்தில் நல்லுறவைத் தேக்கு!!!

**பூங்காவனம் கிடைக்குமிடங்கள்**

பூபாலசிங்கம் புத்தகசாலை - கொழும்பு 06
பூங்காவனம் பதிப்பகம் - கல்கிசை

ப்ரியமான வாசகர்களே! உங்களால் இயன்ற அன்பளிப்புக்களை வழங்குவதன் மூலம் 'பூங்காவனம்' சஞ்சிகையின் தொடர் வளர்ச்சிக்கு உதவுங்கள்!

# வாழ்க்கைச் சோலை நாவல் மீதான பார்வை

## நூல் மதிப்பீடு

ரிம்ஸா முஹம்மத்

ஒரு சமூகத்தின் வரலாற்றை நாவலினூடாக வெளிக்கொணரும்போது அச்சமூகம் பற்றிய விடயங்கள் வாசகனும் அறிந்துகொள்ளக் கூடியதாக இருக்கும். நாவலில் உலாவும் பாத்திரங்கள் மனதோடு பதிந்து நேரில் பார்க்கக்கூடிய ஒரு நிகழ்வை மனதுக்குள் ஏற்படுத்துவது நாவலில் கட்டாயம் காணப்பட வேண்டிய விடயமாகும். சில நாவல்கள் காலத்தால் அழியாதவை. சில நாவல்கள் வாசித்ததும் மறந்துவிடக் கூடியவை. இது எழுதுகின்ற ஆற்றலிலும், மொழிப் புலமையிலும், எழுத்தாளனுக்கும் வாசகனுக்குமிடையில் உள்ள உள்ளுணர்வுக்கும் உட்பட்டிருக்கின்றது.

வாழ்க்கைச் சோலை என்ற நாவல் நித்தியஜோதியின் இரண்டாவது நூலாகும். இவர் ஏற்கனவே மகுட வைரங்கள் என்ற கவிதைத் தொகுதியை வெளியிட்டுள்ளார். பூனாகலை நித்தியஜோதி எழுதியுள்ள வாழ்க்கைச் சோலை என்ற நாவல் 88 பக்கங்களில் தமிழ் பட்டதாரிகள் ஒன்றியத்தினால் வெளியிடப்பட்டிருக்கின்றது.

பலரது வாழ்க்கை இன்று பாலைவனமாக மாற்றியிருக்கின்ற நிலையில் ஏதாவதொரு வகையில் வாழ்க்கை வசந்தமாக வேண்டும் என்று ஏங்குபவர்கள் ஏராளம். வாழ்க்கைச் சோலை என்ற தலைப்பு நாவலை வாசிப்பதற்கு முன்னரேயே வாசகனை மகிழ்ச்சியிலாழ்த்தி விடுகின்றது.

இந்த நாவலானது அறிவியல் சார்ந்த விடயங்களோடு பயணிப்பதுடன் பல்லின சமூகத்தின் நிலவரங்களையும் ஆங்காங்கே படம் பிடித்துக் காட்டுகிறது. அது மாத்திரமல்லாமல் அரசியல் சார்ந்த விடயங்களும் இந்நாவலில் அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது. நாவலுக்கு சுவாரஷ்யம் சேர்க்கக் கூடியதாக ஒரு மெல்லிய காதல் கதையும் நகர்கிறது.



இலங்கையின் வரலாற்றில் என்றுமே முன்னேற்றம் காணாதவர்களாக தோட்டத் தொழிலாளர்கள் இனம் காணப்படுகின்றனர். அவர்களின் அடிப்படை வாழ்க்கை வசதிகள்கூட சரிவர அமையாதவர்கள் வெறும் கூலிகளாக நோக்கப்பட்டு வந்தாலும் தற்போது அந்த நிலமை மிக வேகமாக மாறி வருகின்றமை கண்கூடு. கல்வியறிவிலும், தொழில்நுட்பத்திலும் அவர்களின்

பங்கும் அளப்பரியதாகக் காணப்படுகின்றது. மலையகப் பிரதேசம் சார்ந்த கருத்துக்கள் மாத்திரமல்லாது நாட்டின் ஏனைய பகுதிகளையும் உள்ளடக்கி சமூகமான உறவுக்கு வித்திடும் வழிமுறையை ஏற்படுத்தியுள்ளது எனலாம். மலையகத்தைச் சேர்ந்த பிற கவிஞர்களின் பொருத்தமான கவி வரிகள் ஒவ்வொரு அத்தியாயத்தின் துவக்கத்திலும் தரப்பட்டுள்ளமையானது இந்நாவலின் முக்கிய சிறப்பம்சமாகக் கொள்ளக் கூடியதுடன் குறித்த மலையக கவிஞர்களின் திறமையை பறைசாற்றுவதாகவும் அவை அமைந்திருக்கின்றது.

இந்நாவலின் இரண்டாவது பாகத்தை வெளியிடவிருக்கும் நூலாசிரியர் நாவலின் மென்மை தன்மையை தக்க வைப்பதற்கான இன்னும் புதிய பல உத்திகளையும் கையாண்டு வெற்றிபெற வாழ்த்துகிறேன்!!!

**நூலின் பெயர் - வாழ்க்கைச் சோலை**
**நூலின் வகை - நாவல்**
**நூலாசிரியர் - பூனாகலை நித்தியஜோதி**
**வெளியீடு - தமிழ் பட்டதாரிகள் ஒன்றியம்**
**விலை - 290 ரூபாய்**

# பள்ளிக்கூடம்

கால் வைத்து பழகி
ஓட்டம் பிடித்த சிறு பயணம்..
கரும்பலகையில்
கண்சிமிட்டி பேசிய எழுத்து..
வாத்தியாரின் பிரம்பைப் பார்த்து
பின்னே தள்ளிப் பயந்த கால்கள்!

உயரம் கூடக்கூட
அளவெடுத்து
தைத்த சட்டைபோல
படிக்க படிக்க பாடங்களும்
அறிவை உயர்த்த
வானை நோக்கி பறப்பதே
பள்ளிகூட வாழ்க்கை!

பணிவாய் பவ்வியமாய்
இன்பமாய் அமர்ந்த கூடம்..
தேனீக்களாய்
மொய்த்த கூட்டத்தில்
சுவையோடு கூடிய நட்பு!

மனங்களில் மகிழ்ச்சி
வண்டுகளாய் மொய்க்க..
கிளைகளில் அமர்ந்த
மழைத் துளி நீரை
குலுக்கிய இன்பம்!

தயங்கிடும் மூளைக்கும்
சொல்லிக் கொடுக்குமே
இந்த அறிவுக்கூடம்!

வாழ்க்கை எங்கே போகிறதென்று
தெரியாமலே
துள்ளலுடன் நடந்து
சென்று வந்த பள்ளிகூடம்!!!

**ஹைருன் ரஹ்மான்**

# பாவ பலன்

**சிறுகதை**

தியத்தலாவ எச்.எப். ரிஸ்னா

இலேசாக தூறிக்கொண்டிருந்த மழை கொஞ்சம் கொஞ்சமாக அதிகரித்துக் கொண்டிருந்தது. சுற்றும் முற்றும் உள்ளவர்கள் வெளியே எட்டிப் பார்ப்பதும் வீட்டுக்குள் போவதுமாக தவித்துக் கொண்டிருந்தார்கள். தொழிலுக்குச் செல்பவர்கள் மாத்திரம் குடையைப் பிடித்துக் கொண்டு செய்வதறியாமல் உடல் நனைய தலையை மட்டும் காப்பாற்றிக் கொண்டு விரைந்து சென்றார்கள்.

'என்னப்பா இந்த மழ உடாது போல.. இப்படி ச்சிர் ச்சிர்னு பேஞ்சா மனுசன் வேலவெட்டிக்குப் போறல்லியா?'

'வெயில் வந்தாலும் வாட்டி எடுக்குது. மழ பெஞ்சாலும் இப்படி இருக்குது.. என்ன செய்ய? எதயும் மனிசன் கொற சொல்லத்தான் பாப்பான்..'

இயற்கை சீற்றம்கொண்டு மழையை சோவென பொழியத் தொடங்கியது. அந்தக் வீட்டில் வாழ்ந்துகொண்டிருந்த ரஹ்மத்தும்மா தன் பேத்தி சியானாவோடு தனிமையில் தவித்துக் கொண்டிருந்தாள். பார்க்குமிடமெல்லாம் கூரையில் ஓடு விலகி வீட்டுக்குள் நீர் ஒழுகிக் கொண்டிருந்தது. ஆங்காங்கே பானைகளை வைத்து வீட்டிற்குள் மழை நீர் சிந்திவிடாமலிருக்க ரஹ்மத்தும்மா பாடுபட்டாள். பானையில் சேர்ந்த நீர் நிரம்பி வீட்டிற்குள் கொட்டிக் கொண்டிருந்தது.

வீட்டிற்கு வெளியே உள்ள நீர் உள்ளே வருவதற்கும், வீட்டிற்குள் உள்ள நீர் வெளியே போவதற்கும் கடும் போட்டி போட்டிக் கொண்டிருந்தன. குமர் பிள்ளையை வைத்துக்கொண்டு ரஹ்மத்தும்மா சாதாரண வாழ்க்கையை ஓட்டுவதற்கே மிகவும் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கின்றாள். தற்போது வெளியே இறங்க முடியாதபடியும், வீட்டுக்குள் இருக்க முடியாதபடியும் இப்படி விடாமல் பெய்கின்ற மழையால் அவளது சித்தம் கலங்கிப் போயிருந்தது.

இதற்கெல்லாம் மிக முக்கியமான காரணம் அவளது ஒரே மகனும் மருமகளும் விபத்தில் இறந்து போனதும், அதை நேரில் கண்ட அதிர்ச்சியால் அவளது பேத்தி சியானா புத்தி சுவாதீனமற்று சதாவும் எங்காவது வெறித்துப் பார்த்தபடியே இருப்பதாகும். சியானாவை ஒத்த அவளது நண்பிகள் எல்லோரும் தற்போது அவளையும், சியானாவையும் பார்த்துவிட்டுச் செல்லும்போது

ரஹ்மத்தும்மாவுக்கு வானமே இடிந்து தன் தலையில் வீழ்ந்தது போலிருக்கும்.

'இறைவனே ஏன் எனக்கு இந்தச் சோதன? இந்தக் கொமர நா எப்படி காப்பாத்துவன்? எப்படி கரை சேர்ப்பன்? நான் மவுத்தான பிறகு இவள யாரு பாத்துக்குவாங்க...?'

என்று எண்ணியெண்ணி கண்ணீர் விடுவாள். சில பொழுதுகளில் அவள் தனக்குத்தானே புலம்பிக்கொள்வாள்.

'ஏ மவன் நஸாரும் அவன் பொஞ்சாதியும் எவ்வளவு கஷ்டப்பட்டு கொஞ்சம்கொஞ்சமாக முன்னேறினாங்க.. இந்தப் புள்ளய எவ்வளவு செல்லமா பாத்துக்கிட்டாங்க.. என்னையும் குழந்தை போல பாத்துக்கிட்டியே வாப்பா.. அவசரமா உன் விதிய அந்த ஆண்டவன் முடிச்சிட்டானே.. இந்தக் கிழவிய தனியாளாக்கி தலையில ஒரு பெரிய பொறுப்பயும் சுமத்திட்டானே...' என்று அரற்றுவாள். ஆனால் இவை எதுவும் தெரியாமல் சியானாவோ எங்கோ வெறித்துப் பார்த்தபடியே இருப்பாள்.

**********

ரஹ்மத்தும்மாவின் மகன் நஸார் ஒரு புடைவைக் கடை செய்து தன் குடும்பத்தாரை மிக அன்பாகப் பார்த்து வந்தார். அவரது மனைவி காமிலாவும் அவருக்கு ஒத்தாசையாக வீட்டிலே பல ஆடைகளைத் தைத்து கடைக்குக் கொடுத்தனுப்புவாள்.

'காமிலா நீ எதுக்குமா வீணா கஷ்டப்படுறே? தைக்கிறதுக்கு நிறைய ஆக்கள் இருக்காங்க. அவங்கள்ள லாபமா தச்சித் தாரவங்ககிட்ட கொடுத்தா செய்து தருவாங்க..'

'என்னங்க நீங்க... நம்ம குடும்பத்துக்காகத் தானே ஒழக்கிறன். எனக்கு இதில எந்தக் கஷ்டமும் இல்ல. ஆக்கி அரிச்சித் திண்டப் பொறவு வேற வேலயும் வேணும் தானே?'

'ஏம்மா என் மவன்தான் சொல்றானில்ல. நீ ஏம்மா கஷ்டப்படுற. பேசாம என் தலைல பேன் இருக்கானு பாரு. தல சொறிச்சல் இன்னம் உடல்ல புள்ள'

'மாமி நீங்க மட்டுமென்ன உங்க புள்ளக்காக கொச்சிக்கா காய வச்சி அரச்சி, மிளகு அரச்சி எல்லா வேலயும் பாக்குறீங்க தானே.. அத போலதான் மாமி நானும். நமக்காக கஷ்டப்படுற இவர கஷ்டப்படுத்தாம பாத்துக்கறது நம்ம கடமையில்லயா?'

'என்னமோ பண்ணுங்க. மாமியும் மருமவளும் ஒத்துமயா இருக்குறத பாத்து

இந்த ஊரே பொறாமப்படுது. முதல்ல ஹஸரத்கிட்ட சொல்லி தண்ணி ஓதி எடுக்கணும்'

இவ்வாறு காமிலாவும், ரஹ்மத்தும்மாவும், நஸாரும் பேசிக் கொண்டிருப்பார்கள். அவர்கள் உழைப்பால் உயர்ந்து செழிப்பாக வாழத் தொடங்கினார்கள். அவர்களுக்கு பணம் ஒரு பொருட்டாகத் தெரியாதளவுக்கு அவர்களின் வாழ்க்கைத் தரம் உயர்ந்தது. ஆனாலும் அவர்கள் பணத்திமிர் பிடித்து அலையவில்லை. நஸார் புதியதொரு மாடி வீட்டையும் தனது குடும்பத்தினரின் பாவனைக்காக ஒரு வேனும் வாங்கினார். மற்ற பொருட்கள் யாவும் அவ்வப்போது பயன்பாட்டுக்கு ஏற்ப வாங்கப்பட்டன. இவர்களின் இந்த செல்லத்தில் வளர்ந்தவள்தான் சியானா.

நஸார், ரஹ்மத்தும்மாவை எந்தக் குறையும் இல்லாமல் பார்த்து வந்தார். அவருக்கு தன் தாய் மீது அளவுகடந்த பாசம் இருந்தது. அதே போல காமிலாவும் ரஹ்மத்தும்மா மீது அன்பு கொண்டவளாகவே இருந்தாள். மூவரின் செல்லப் பிள்ளையாக இருந்த சியானா படிப்பிலும் ஒழுக்கத்திலும் சிறந்து விளங்கினாள்.

அந்த ஊர் வழக்கப்படி பெண்களுக்கு பதினெட்டு வயதிலேயே திருமணம் செய்து வைக்க வேண்டும். ஆனால் நஸாரோ சியானா நன்றாகப் படித்து நல்லதொரு நிலையை எட்ட வேண்டும் என எண்ணினார். மார்க்கத்தில் கல்விக்குத் தடையில்லை. அவ்வாறு கல்வி கற்று சமூகத்தின் தன்மைகளை ஏற்று வாழ்வதற்கு சியானா பழகிக்கொள்ள வேண்டும் என்பதை அவர் நன்றாக உணர்ந்திருந்தார். சியானாவுக்கு மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது. தன் தந்தை தன் எதிர்காலம் பற்றி சிந்திக்கும் ஒவ்வொரு நிமிடமும் அவள் இறைவனுக்கு முதலில் நன்றி கூறுவாள்.

சியானாவுக்கு தனது ஏனைய நண்பிகளைப் போன்று காரில் போக வேண்டும் என்ற எண்ணம் உதித்தது. அதைத் தன் தந்தையிடம் கூறினாள். முதலில் சற்றுத் தயங்கிய அவர், சுமார் ஆறு மாதங்கள் பொறுத்துக்கொள்ளும்படி கூறினார்.

குறிப்பிட்ட ஆறு மாதங்கள் கடந்த நிலையில் சியானாவை அழைத்துக்கொண்டு வேனில் புறப்பட்டார். கார்கள் நிறுத்தி வைக்கப்படுட்டிருக்கும் காட்சியறைக்குள் இருவரும் பிரவேசித்தார்கள். நஸாரை அறிந்து வைத்திருந்த காட்சியறை முகாமையாளர் விரைந்து வந்து அவரது கரம் பற்றி தன் பிரத்தியேக அறைக்கு அழைத்துச் சென்றார்.

'சொல்லுங்க பொஸ்... இந்தப் பக்கம் வந்திருக்கிறீங்க..'

‘என் மகளுக்கு காரில போவனும்னு ஆச வந்திருக்கு. அதான் பாத்திட்டுப் போலாம்னு’

‘வாங்க சேர் எல்லாத்தயும் நானே காட்டுறேன்’

என்றவாறு அவரையும் சியானாவையும் அழைத்துக்கொண்டு சென்றார். அங்கு நிறுத்தி வைக்கப்பட்டிருந்த கார்கள் புத்தம் புதிய தோற்றத்துடன் கம்பீரமாகக் காட்சியளித்தன. சியானா சுட்டிக் காட்டிய நீல நிறக் காரை வாங்குவதாகக் கூறிச் சென்றார் நஸார்.

ஒரு வாரத்தில் அங்கு சென்ற நஸார் சியானா விரும்பிய நீல நிறக் காரை வாங்கினார். பின்பு அதற்குரிய இலக்கம் பதிவு செய்தல் முதலானவற்றையெல்லாம் நிறைவு செய்ததும், இன்னும் இரண்டு கிழமைகளில் பாதையில் வாகனம் செலுத்தலாம் என்றார்கள்.

அதன் பிறகு நால்வரும் பல சுற்றுலாக்கள், விருந்தினர் வீடுகள் என்று அந்தக் காரில் சவாரி செய்தார்கள். அவ்வாறான சந்தர்ப்பங்கள் அனைவரின் மனதிலும் குதூகலத்தை ஏற்படுத்தியது. பரவசத்தில் திகழ்ந்தாள் சியானா.

இன்னொருநாள் சியானாவின் நண்பியின் பிறந்தநாள் என்பதால் அங்கு காரில் போவதற்குத் தீர்மானித்தார்கள். ரஹ்மத்தும்மா தன் உடல்நிலை சாதகமாக இல்லாததால் அவர்களைப் போகச் சொல்லிவிட்டு வீட்டில் இருந்துவிட்டாள்.

அதன் பிறகு அவளுக்குக் கிடைத்த தகவல் அவளது மகனும் மருமகளும் வாகன விபத்தில் சிக்கி ஸ்தலத்திலேயே இறந்துவிட்டதும், பேத்தி சியானா சுயநினைவற்று மருத்துவமனையில் சேர்க்கப் பட்டிருக்கிறாள் என்பதுமாகும்.

உடைந்து போன ரஹ்மத்தும்மா அயலவர்களுடன் விரைந்து சென்று ஏனைய வேலைகளைக் கவனித்து தனது மகனதும் மருமகளதும் இறுதிக் கிரியைகளை மேற்கொண்டாள். சியானாவை வீட்டுக்கு அழைத்துவந்து பல சிகிச்சை அளித்தும் அவள் குணமாகவேயில்லை. நாளாக நாளாக சரியாகிவிடும் என்ற நம்பிக்கை சரியத் தொடங்கியது.

நஸார் சேர்த்து வைத்த பணம் கொஞ்சம் கொஞ்சமாகக் கரைந்தது. அவருடன் வியாபார ரீதியாகப் பழகியவர்கள் எல்லாம் நஸார் தர வேண்டிய கடன் தொகைகளைக் கூறி அவர்களே அவற்றை பெற ஏற்பாடும் செய்து கொண்டார்கள். அதில் நஸாருடன் மிக நெருக்கமாகப் பழகிய சியாமும், ரியாஸும் ரஹ்மத்தும்மாவிடம் வந்து ஏதேதோ பத்திரங்களைக் கொடுத்து ஒப்பமிடச் சொன்னார்கள். முதுமையின் பிடியில் தள்ளாடிக் கொண்டிருந்த ரஹ்மத்தும்மா கண்ணீர்விட்டு அழுதாள். அவள் அவர்களிடம் கெஞ்சிப் பார்த்தாள். அவர்கள் மிரட்டினார்கள்.

'மகன் சியாம்.. நஸார் இரிக்கக்கொளயெல்லாம் மாமி மாமின்னு பாசமா பேசுவியேப்பா... இப்ப என்ன இப்படி கத்துற?'

'ஆமாமா பாசமா பேசிக்கிட்டு இருந்தா என் பணத்தயெல்லாம் யாரு தருவாங்க?'

'அல்லாஹ்வுக்காக எங்கள விட்டுருப்பா.. நீங்கள்ளாம் எதுக்காக கையொப்பம் கேக்குறீங்கனு தெரியல. ஆனா எல்லாம் பறிபோகுதுனு புரியிது வாப்பா. கூட ஒத்தாசயா இருக்க வேண்டிய நீங்களே இப்படி செஞ்சா இந்தக் கொமர கர சேக்க நான் என்ன பண்ணுறது?'

'இந்தப் பைத்தியத்துக்கு எதுக்கு கல்யாணம்?'

'அப்படி சொல்லாத வாப்பா... இதுகள் நல்லா இருந்தத்த கண்ணால பாத்தவங்கதானே நீங்க? இப்ப இப்படி சொல்லலாமா?'

'டேய் சியாம் இது வயசு போன காலத்துல வாழ்றதுக்கு ஒரு குடிசை போதாதா?... மத்தது வெவரம்கெட்டு கெடக்கு. இதுகளுக்கு மாடிவீடு இருந்தா மட்டும் அப்படியே சீமாட்டிகளா வாழ்ந்திருங்களா? மாமி நீங்க இப்ப கையொப்பத்த வைங்க'

இவ்வாறு காரசாரமாக அவர்கள் ரஹ்மத்தும்மாவை மிரட்டிக்கொண்டிருந்தார்கள். எதிர்த்து எதுவும் செய்ய முடியாமல் கையொப்பமிட வேண்டிய சூழ்நிலைக்கு தள்ளப்பட்டாள் ரஹ்மத்தும்மா. ஏனெனில் அவர்கள் சியானாவை பைத்தியம் என்று சொன்னாலும் அவர்களின் கண்கள் சியானாவில் மேய்ந்ததை ரஹ்மத்தும்மா அவதானித்தாள். அதனால் தன்னை அடித்துக் கொன்றாலும் பரவாயில்லை. சியானா விடயத்தில் வேறு விளைவுகள் வந்துவிடக் கூடாது என்பதை எண்ணியே அவள் 'கையொப்பமிட்டாள். வீடு, வளவு, வேன், கார் எல்லாம் அவள் பார்த்திருக்க ஏனையவர்கள் சூறையாடியதையும் அவற்றுக்கெல்லாம் சியாமும் ரியாஸும் காரணமாக இருந்ததையும் ரஹ்மத்தும்மாவால் தாங்கவே முடியவில்லை. அவளது மனம் அவர்களின் செயல்களால் நொந்தது. அவளுக்கு தன் மகன் நஸார் இவர்கள் பற்றி சொன்னது ஞாபகம் வந்தது.

'உம்மா.. சியாமும் ரியாஸும் ஒரு பொறவிபோல எனக்கு சப்போட்டா இருக்காங்க. உங்களுக்கு மூனு ஆம்புளப் புள்ள இருக்குனு நெனச்சிக்கோங்க. இவங்க எப்ப வந்தாலும் என்னைய கவனிக்கிற மாதிரியே கவனிங்க'

அப்போதெல்லாம் நல்லவர்களாகத் தெரிந்த இவர்கள் தற்போது நல்ல பாம்பாகத் தெரிவதற்குக் காரணம் பணம். பணத்தாசை பிடித்துவிட்டால்

பிணமும் வாய் திறக்குமென்று சொல்வார்களே. அது போலத்தான் இவர்களும். ரஹ்மத்தும்மாவையும் சியானாவையும் பற்றி கொஞ்சமும் யோசிக்கவில்லை. எத்தனை முறை ரஹ்மத்தும்மாவின் கைகளால் பரிமாறிய உணவை உண்டிருப்பார்கள்? மனசாட்சி இறந்து அவர்கள் அவ்வாறு நடந்ததை எண்ணி உள்ளுக்குள் குமைந்தாள் ரஹ்மத்தும்மா.

இரண்டு கிழமைகளின் பின்னர் யாரென்றே தெரியாத இருவர் அவர்களது வீட்டுக்குள் பிரவேசித்து ரஹ்மத்தும்மாவையும் சியானாவையும் தரதரவென இழுத்துக்கொண்டு போய் ஒரு வேனில் ஏற்றினார்கள். ரஹ்மத்தும்மா ஓலமிட்டாள். உணர்வுகள் புரியாவிட்டாலும் அவர்களின் இரும்புப் பிடியால் வலியை உணர்ந்த சியானாவும் ஓவென அழத்தொடங்கினாள்.

அவர்கள் வீட்டுக்குள் நுழைந்து பாய், தலையணை, சமையல் உபகரணங்கள் போன்றவற்றையும் எடுத்துக்கொண்டு வேனில் போட்டுவிட்டு ஒரு சிறிய வீட்டின் முன் வேனைக்கொண்டு வந்து நிறுத்தினார்கள். அதை வீடு என்று சொல்ல முடியாது. இடர்பாடுகளுக்கு உட்பட்டு சேதமடைந்த நாலு சுவர்களைக் கொண்டிருந்தது. கூரைக்கு ஓடு பொருத்தப்பட்டிருந்தது. அதில் பாதி ஓடுகள் கழன்றிருந்தன.

'இங்கதான் இனிமே நீங்க இருக்கனும்னு ரியாஸ் நானா சொல்லச் சொன்னாரு'

என்றுவிட்டுப் போய்விட்டார்கள். ரியாஸும் சியாமும் ஆளரவம் குறைந்த ஒரு பகுதியில் இவர்களை குடியமர்த்திவிட்டு நஸாரின் இருமாடி வீட்டில் இருவரும் குடும்பத்துடன் வசித்தார்கள். இவற்றையெல்லாம் எண்ணி ரஹ்மத்தும்மா இறைவனிடம் தன் உள்ளக் குமுறல்களை வெளியிட்டாள்.

அதன் பிறகு ரஹ்மத்தும்மா தள்ளாத இந்த வயதிலும் வீட்டைப் பூட்டிவிட்டு வெளியே சென்று வீட்டுவேலைகளைச் செய்வாள். பின்னர் ஏதாவது சாப்பிடக் கொண்டு வந்து சியானாவுக்கு கொடுத்தபின் தானும் சாப்பிடுவாள். அது மாத்திரமே அவளால் செய்ய முடியுமாக இருந்தது.

**********

மழை சோவெனப் பெய்யத் தொடங்கியது. கொஞ்சமாக ஆரம்பித்த மழை கட்டுடைத்துப் பெய்தது. நீர்நிலைகள் நீரால் நிறைந்து வழிந்தன. ரஹ்மத்தும்மா இறைவனே கதி என்று தியானத்தில் ஈடுபடத் தொடங்கினாள். சியானா எப்போதும் போலல்லாமல் ரஹ்மத்தும்மாவையே கண்கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தாள்.

ஓரிரு மணித்தியாலங்கள் சென்றதும் அந்தப் பகுதியில் வெள்ளம் வரத் தொடங்கியது. வெள்ளம் படிப்படியாக உயர்ந்தது. பாதிக்கப்பட்டவர்களுக்கான

நிவாரணங்களுக்காக ஊடகங்கள் தனவந்தர்களை நாடி நின்றன. வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்கள் சிலர் தம் உடமைகளை எண்ணி வீட்டைவிட்டு வெளியேறுவதா இல்லையா என்று யோசித்துக் கொண்டிருந்தார்கள். சிலர் ஒருவேளை உணவுக்காக ஏங்கிக்கிடந்தார்கள். முப்படையினரின் உதவியால் பலர் மீட்கப்பட்டு பாதுகாப்பான இடங்களில் சேர்க்கப்பட்டார்கள்.

பள்ளித் தலைவர் சியாமும், செயலாளர் ரியாஸும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் சேர்க்கும் பணியில் மும்முரமாக ஈடுபட்டதுடன் தம்மாலான உதவிகளையும் இறைவனின் திருப்பொருத்தத்தை வேண்டி செய்தார்கள். இருவரது மனைவியும் ஒரே ஊரைச் சேர்ந்தவர்கள் என்றபடியால் மழை அதிகரிக்கும்போதே மனைவிமாரின் ஊர்களுக்கு அவர்களையும் பிள்ளைகளையும் அனுப்பிவிட்டு அவர்களிருவரும் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் பெற்றுக்கொடுப்பதற்காக உதவிக் கொண்டிருந்தார்கள்.

அவ்வேளையில் சியாமுக்கு தொலைபேசி அழைப்பொன்று வந்தது. காதில் பொருத்திய சியாமுக்கு மயக்கம் வருவது போலிருந்தது. அவனது மனைவி மக்கள் உட்பட ரியாஸின் மனைவி மக்களும் மண்சரிவுக்குள் அகப்பட்டு ஸ்தலத்திலேயே இறந்துவிட்டதாக அறிமுகமற்ற குரலில் வந்த பொலீசாரின் அழைப்பு சொல்லியது. சியாம் மூலம் விடயம் கேள்விப்பட்ட ரியாஸின் கண்களில் கண்ணீர் பிரவாகித்தது. அவர்கள் செய்வதறியாமல் சிலையாக இருந்தார்கள்.

பணம், பதவி, அந்தஸ்து, ரஹ்மத்தும்மாவை மிரட்டி கையொப்பம் வாங்கி அனுபவித்த நஸாரின் மாடி வீடு, வளவு, வேன், சியானா ஆசைப்பட்ட நீலக் கார் எதுவும் அவர்களுக்கு நினைவு வரவில்லை.

தமது மனைவி மக்கள் மண்சரிவுக்குள் அகப்பட்டபோது கதறக்கூட முடியாமல் எப்படித் தவித்திருப்பார்கள் என்று நினைத்தபோது ரஹ்மத்தும்மாவும் சியானாவும் அவர்களது சிந்தனையில் வந்து கலகலவென சிரிப்பதான பிரம்மை இருவருக்கும் ஏற்பட்டது.

நீர் மட்டம் உயர்வதாகவும், யாராவது இருந்தால் பாதுகாப்பான இடங்களுக்கு சென்றுவிடுங்கள் என்பதாகவும் அறிவிக்கப்பட்ட அறிவித்தல் அவர்களிருவரின் காதுகளில் விழவில்லை. முப்படையினரின் தீவிர தேடுதலின்போதும் அவர்கள் சிக்கவில்லை. எனவே சடுதியாக உயர்ந்த நீர்பெருக்கில் சியாமும் ரியாஸும் மூழ்கிக்கொண்டிருந்தார்கள்.

இவர்களைப் பார்த்து பரிதாபப்படவோ, பெருமூச்சுவிடவோ முடியாதபடி ரஹ்மத்தும்மாவும் சியானாவும் ஏற்கனவே வெள்ளத்தில் மூழ்கி இறந்து போயிருந்தார்கள்!!!

## கனவு நனவாகுமா?

அகமியம் பேசாது
புறங்களைப் பேசும்
மடமைகள் நீங்கி
இகபர வாழ்வு செழிக்க
இனிய இஸ்லாம்
தழைத்தோங்க
ஆண்டவனின் ஆணைகள்
அகிலத்தை ஆள வேண்டும்!

கயமைகளைக் கருவறுத்து
கடமைகளைக் கருத்திலேற்று
கச்சிதமாய் செய்துமுடிக்கும்
மனிதம் பேணும் புனிதர்கள்
தோன்றிட வேண்டும்!

பேராசை தீராத பெண்ணாசை
ஓயாத பணத்தாசை
நோயான புகழாசை
இவையெல்லாம் மனித
உளச் சிறையிலிருந்து
விடுதலை பெற்றிட வேண்டும்!

வீண் வம்புகள் விரண்டோடி
தேன் பண்புகள் வந்தாகி
உண்மையன்பு கொண்ட
மனித மனம்
உருவாகிட வேண்டும்!

அகிலத்தின் அதிபதியே!
காத்திருக்கிறேன்
நல்லெழுச்சி கொண்ட
சமூகம் உருவாகும்வரை
எதிர்பார்த்திருக்கிறேன்!!!

## மன்னிப்பானா தண்டிப்பானா?

படிப்பறிவால் பகுத்தறிவை
வளர்த்த பண்பறிந்த மனிதனும்
இன்று
வரம்பு மீறி ஆசைகளுக்கு
வாய்ப்பளிக்கிறான்!

வெறுத்தொதுக்க வேண்டிய
பாவங்களை வெட்கமின்றி
செய்கிறான் இவன்
சேமித்து வைத்த அறிவோ
அவற்றைத் தடுக்க முற்பட்டு
தோல்வியைக் கண்டுவிடுகிறது!

பாவத்தின் எதிர்விளைவை
ஆன்மீக அறிவு இயம்பும்
இன்றேல் விஞ்ஞான அறிவு
இயம்பும் இருப்பினும்
பயனில்லையே!

மதியை மிதித்து
மன இச்சையினால்
இறையச்சமின்றி
பாவங்கள் செய்யுமிவன்
இறைவன் நிகரில்லா அன்பாளன்
என்று தன் மனதைத் தேற்றி
தோற்று விடுகின்றான்!


ஓ.. இஸ்லாமிய நெஞ்சங்களே
படித்தவன் பாவ வெள்ளத்தில்
மூழ்கினால் படித்தவனும்
படிக்காதவனும் சமமாவார்களா?
என கேள்வியெழுப்பும்
இறைவன் இவனை
மன்னிப்பானா? தண்டிப்பானா???

**பூவலிகட எம்.எஸ்.எம். சப்ரி**

# எரிந்த சிறகுகள் கவிதைத் தொகுதி

## நூல் மதிப்பீடு

**பதுளை பாஹிரா**



இலக்கிய ரசனைக்குள், ஆன்மீக வரையறைக்குள், யதார்த்தத்தின் வீச்சோடு நகர்கிறது ரிம்ஸா முஹம்மதின் எரிந்த சிறகுகள் கவிதைத் தொகுதி. சமூக அவலங்களை நுண்ணிய திறனாய்வோடு பேசும் வல்லமையில் இவர் வெற்றி பெற்றிருக்கிறார். எம்மத்தியில் எரிக்கப்பட்டாமல் படர்ந்திருக்கும் வாழ்வியல் வன்முறைகள், தாழ்நிலை சம்பிரதாயங்கள், சால்பற்ற சடங்குகள், பாழ்படுத்தும் முகமூடிகள் என்பவற்றை நேரிய நோக்கோடு வரிகளாகக் கோர்த்து இலக்கிய நெஞ்சங்களுக்கு சமர்ப்பித்திருக்கிறார். புரவலர் ஹாஷிம் உமர் அவர்கள் அண்மையில் தனது 821 ஆவது முதல் பிரதியாக இந்த நூலைப் பெற்றுக்கொண்டுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

பொசுக்கப்பட்ட மனித உணர்வுகளின் ஓசைகள், ஓலங்கள், பெண்ணியத்திற்கெதிரான அத்துமீறல்கள், மனித உரிமை துஷ்பிரயோகங்கள், தேச ஐக்கியத்தை சீர்குலைக்கும் குரோதங்கள் என்ற விடயப் பரப்பில் கவிதைகள் விரிகின்றன. 54 கவிதைகள், 7 மெல்லிசைப் பாடல்கள் புதுமையின் வாண்மையோடும், புரட்சியின் பெருமையோடும் படைப்பிலக்கியத்துக்கு பெரும் பங்களிப்பு செய்திருக்கிறார் இலக்கிய கர்த்தா. பன்முக ஆளுமை கொண்ட இவரின் இலக்கியப் பயணம் பாரதி கனவுக்கு வெற்றியே. 12 ஆவ்து நூலான எரிந்த சிறகுகள் கவிதைத் துறையில் அவருக்குள்ள ஆழ்ந்த ஈடுபாட்டை மேன்மைப்படுத்தியுள்ளது.

செம்மொழி ஆற்றலும், இலக்கிய இலக்கண ஆழமும் கவி யாத்தலுக்கு அடிப்படை. இவற்றின் வழியே நவீனத்துவ சிந்தனையோடு எழுதப்பட்ட எரிந்த சிறகுகள் இலக்கிய உலகிற்கு பெரும் சிறப்பு. மனுக்குலத்தை மதிக்கும், மனிதாபிமானப் போக்குகள், நவீன இலக்கியப் படைப்புகளில் காணலாம். அவ்வரிசையில் ரிம்ஸா முஹம்மத்தின் அர்ப்பணிப்பும் முக்கியமானதே.

தொலைந்த கவிதை, ஒப்பனைகள், சாதல் நன்றே, சொல்ல மறந்த சேதிகள், கறைகள், தொடரும் தொல்லை, வஞ்சகம், ஓலைக் குடிசையும் பாதி நிலவும், மனிதமில்லா மனிதன், காலத்தின் ஓலம், இறையோன் தந்த மாதம் போன்ற கவிதைகளில் சமூகத்திற்குகந்த அறிவுரைகளும் ஆன்மீக செய்திகளும் போர்க் கலாசாரமும் கூறப்பட்டுள்ளன. ஆளுள் கைதி,

எதிரொலி, விளையும் நினைவுகள் போன்ற காதலைப் பேசும் கவிதைகள் இதயத்திற்கு இதமளிக்கின்றன.

புதிய தலைமுறையினர் எதிர்பார்க்கும் நவீனத்துவ போக்கு, சொல்லாட்சி, சிந்தனைச் செறிவு என்பனவற்றால் எரிந்த சிறகுகள் இலக்கிய உலகில் வரவேற்று பெறும் என்பது உறுதி. பல இலக்கிய வடிவங்களில் ஆற்றலை வெளிப்படுத்திய படைப்பாளி, இன்னும் பல தடங்களில் கால்பதித்து வெற்றிபெற வாழ்த்துக்கள்!!!

# எமக்கான கூடும் சுதந்திரமும்

நான்
லயத்துக்குருவி
எனக்கு
ஓட்டுக் குருவி எனும்
இன்னுமொரு பெயருமுண்டு!

எனக்கென கூடு
நிரந்தரமாயில்லை
யாரேனும்
வீட்டுக் கூரையில்
கூடமைப்பேன்..

வாழை நார் கொண்டும்
சடம்பு நூல் கொண்டும்
திரித்த கயிற்றை
உரித்தெடுத்தும்!

அவர்கள்
என்னைக் கலைப்பதில்லை
அவர்கள் குடும்பம்
கலைந்திட கூடாதென்பதற்காக..

சிலவேளை
லயத்தில் வாழ்பவர்கள்
காட்போட் பெட்டியும்
உடைந்த
ரேடியோ பெட்டியும்
எமக்கு பரிசளிப்பர்!

உண்டு களித்து
புணர்ந்து
புதுக் குஞ்சுகளை
பிரசவிப்பேன்
ஒரே கூட்டில்!

ஒவ்வொரு நாளும்
சிறகடித்து பறப்பதை
அருகில் வசிப்பவர்கள்
பார்த்து ரசிப்பர்!

குஞ்சுகளுக்கு
சிறகு முளைத்ததும்
ஆனந்தமாக
பறந்து திரிவோம்
அவ்விடம் விட்டு..

அப்போதும்
அவர்கள்
அங்கேயே வசிப்பார்கள்!!!

**செ.ஜெ.பபியான் – டிசைட், சாமிமலை**

# தண்டிக்கப்பட்ட நியாயங்கள்

சிறுகதை

எஸ்.ஆர். பாலசந்திரன்

காலை பத்து மணி. அந்த ஏற்றுமதி இறக்குமதி நிலைய காரியாலயம் சுறுசுறுப்பாக இயங்கிக்கொண்டிருந்தது. ஜெனரல் மனேஜர் சதாசிவம் அமைதியாக வேலைகளைச் செய்துகொண்டிருந்தார். அவருடைய அமைதியைப் பார்த்த காரியதரிசி மாலதி ஆச்சரியத்தில் மூழ்கினாள். எப்படி இந்த மனிதரால் இவ்வளவு அமைதியாக வேலை செய்ய முடிகிறது என்பதை எண்ணி வியந்தாள். இதற்குக் காரணம் சமீபத்தில் ஏற்பட்ட ஒரு பிரச்சினை.

சதாசிவம் ஐம்பத்தைந்து வயதானவர். பொருளாதாரப் பட்டதாரி. 22 வயதில் மகளும் 19 வயதில் மகனும் இருக்கிறார்கள். நிர்வாகத்தில் மிகத்திறமையாகப் பணியாற்றுபவர். நேர்மை, ஒழுங்கு, கண்ணியம், கட்டுப்பாடு இவற்றில் சிறந்தவர். இந்த வருடம் ஓய்வு பெறப் போகிறார். பெரும்பாலும் பதவி நீடிப்பு கிடைக்கலாம் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் அதற்கிடையில் இப்படி ஒரு பிரச்சினை.

உதவி ஜெனரல் மனேஜர் பதிவிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டிருந்தன. சதாசிவம் தனது நேரடிப் பார்வையில் விண்ணப்பங்களைப் பரிசீலித்து 10 பேரை நேர்முகப் பரீட்சைக்கு அழைத்திருந்தார். பின்பு இருவர் இறுதிப் பரிசீலனைக்கு தேர்ந்தெடுக்கப்பட்டனர். ஒருவன் மாதவன். மற்றவன் சேகர். இருவருமே தகுதியானவர்கள். ஆனால் மாதவனின் அதிக புள்ளிகள், உயர் படிப்பு, முன்னைய அனுபவம் ஆகியவற்றால் அவனையே தேர்ந்தெடுக்க உத்தரவு வாங்கினார் சதாசிவம்.

உத்தியோகத்திற்கான பத்திரமும் தயாரிக்கப்பட்ட நிலையில் திடீரென்று மாதவனுக்கு பதில் சேகரை போடும்படி சிபாரிசு செய்தார் சதாசிவம். நிர்வாகமும் ஒப்புக்கொண்டது. ஆனால் இந்த செய்தி வெளியானதும் பலரும் பலவாறு பேசிக்கொண்டார்கள். அவரது மகளின் திருமணம் நிச்சயமானதால் பெரும் தொகை பணம் கைமாறியதாக பேச்சுக்கள் அடிபட்டன. பொறாமை பிடித்த அதிகாரிகள் ஒன்றிணைந்து அநாமதேயக் கடிதம் அனுப்பியிருந்தார்கள். அதுபற்றி 11 மணிக்கு விசாரணை ஆரம்பிக்கப்படவிருந்தது. சேர்மனுக்கு சதாசிவம் மீது நம்பிக்கை அதிகம். எனினும் சக நிர்வாகிகளின் நெருக்குதலினால் விசாரணை மேற்கொள்ள ஒப்புக்கொண்டார். இந்த நிலமையிலும் எவ்வித பதற்றமும் இன்றி வேலை பார்க்கும் சதாசிவத்தைக் கண்டு மாலதி ஆச்சரியப்பட்டதில் வியப்பேதுமில்லையே.

11 மணியளவில் சதாசிவம் விசாரணை அறைக்குள் நுழைந்தார். அவரது முதுகுக்குப் பின்னே கிளம்பிய நமுட்டுச் சிரிப்புகள், நையாண்டிகள் என்பவற்றை கவனித்தவாறே சதாசிவம் விசாரணை அறைக்குள் சென்றார். விசாரணை அறையில் சேர்மன் அமைதியாக அமர்ந்திருந்தார். ஐந்து நிர்வாக உத்தியோகத்தர்கள் விசாரணையை ஆரம்பித்தனர்.

'மிஸ்டர் சதாசிவம். உதவி ஜெனரல் மனேஜர் பதவிக்கு நீங்கள் மாதவனை தேர்ந்தெடுத்தீர்கள். திடீரென ஒரு காரணமும் இல்லாமல் சேகரைத் தேர்ந்தெடுத்திருக்கிறீர்கள். இருவரும் தகுதியானவர்கள்தாம். ஆனால் மாதவன், சேகரைவிட சகல விதத்திலும் சிறந்தவன். ஏன் மாதவனை நிராகரித்தீர்கள்? ஏதாவது காரணம் உண்டா? சொல்லுங்கள் இதுவரை காலத்தில் உங்களைப்பற்றி ஒரு முறைப்பாடும் இல்லையே. இதற்கு என்ன காரணம் சொல்வீர்கள்?"

சதாசிவம் புன்னகைத்துவிட்டு சொல்லத் தொடங்கினார். 'மாதவன் எனது மகளைத் திருமணம் செய்யப் போகிறான். கவனியுங்கள். இந்த நேர்முகப் பரீட்சை தேந்தெடுப்பு சென்ற மாதம் முடிவடைந்தது. ஆனால் இந்த மாத ஆரம்பத்தில்தான் மாதவனின் பெற்றோர் எனது வீட்டுக்கு வந்து பெண் கேட்டார்கள். எனது மகளை கோயிலில் வைத்து பார்த்து மாதவனுக்கு அவளைப் பிடித்துவிட்டதாம். அவளிடமே நேரடியாகப் பேசி சம்மதம் வாங்கிவிட்டானாம். இதை என் மகள் என்னிடம் ஒப்புக்கொண்டாள். எனது மருமகனுக்கு எப்படி இக்காரியலயத்தில் உதவி ஜெனரல் மனேஜர் பதவியைக் கொடுப்பேன்? அது தவறல்லவா? எனது மகளைத் திருமணம் செய்யப் போகிறான் என்பதற்காக அவனைத் தேர்ந்தெடுத்ததாகக் கூற மாட்டார்களா? என் பதவிக் காலம் முடிய இன்னும் ஆறு மாதங்கள் இருக்கின்றன. அப்படியானால் மாமனும் மருமகனும் ஒரே இடத்தில் வேலை செய்ய முடியுமா? நான் மாதவனுக்கு விடயத்தை தெளிவாக விளங்கப்படுத்தினேன். அவனும் உணர்ந்துகொண்டான். இதோ எனது மகளின் திருமண அழைப்பிதழ்'

நிர்வாகிகள் திகைத்துப் போய்விட்டனர். சேர்மன் புன்னகை பூத்தார். சதாசிவம் அமைதியாக எழுந்தார்.

'எனது 30 வருட சேர்விஸில் இப்படியொரு விடயத்தை சந்திப்பது இதுவே முதலும் கடைசியும் தடவையாகும். சீசரின் மனைவி சந்தேகத்திற்கு அப்பாற்பட்டவளாக இருக்க வேண்டும் என்று ஒரு பழமொழி உண்டு. இதோ எனது இராஜினாமா கடிதம்' அறைவிட்டு வெளியே போக எத்தனித்தார் சதாசிவம்.

சதாசிவம்! என்றழைத்தபடி சேர்மன் வந்து கைகளைப் பிடித்துக்கொண்டார். 'எனக்குத் தெரியும் சதாசிவம். ஆனால் ஒரு கெட்ட பெயர் வந்தால் அதை தெளிவுபடுத்த வேண்டுமல்லவா? சீதையைக்கூட இராமன் நெருப்பில் குதிக்க வைத்துத்தானே ஏற்றுக்கொண்டான்' என்று சேர்மன் கூறினார்.

'சேர் அதே இராமன் பின்பு கர்ப்பிணியான சீதையை காட்டுக்கு அனுப்பவில்லையா? அதேபோல் எனக்கு ஏதாவது நடக்கக் கூடுமல்லவா?'

'சதாசிவம் உங்களுக்கு மேலும் ஐந்து வருட பதவி நீடிப்பு வழங்குவதற்கு நிர்வாகக் கூட்டத்தில் சென்ற மாதம் முடிவுசெய்துவிட்டோம். இடையில் இந்தப் பிரச்சினை வந்துவிட்டது. நமது பழைய நிர்வாகி சிதம்பரம் ஓய்வுபெறுகிறார். அவரது இடம் உங்களுக்குத்தான். மாதவனுக்கு அதாவது உங்கள் வருங்கால மருமகனுக்கு கிளை நிறுவனத்தில் ஜெனரல் மனேஜர் பதவியை வழங்கப் போகிறேன். திருமண அழைப்பிதழ் தர மறக்க வேண்டாம்' என்று சேர்மன் சொல்ல அங்கே சுமுகமான சூழ்நிலை நிலவியது.

வெற்றி வீரராக சதாசிவம் அறைக்கு வந்தார். நையாண்டி செய்தவர்களின் முகத்தில் ஈயாடவில்லை. மாலதிக்கு ஆனந்தம் பொறுக்கவில்லை.

'சேர் பதவி உயர்வு கிடைக்கும் நாள் அம்புலன்சுக்கு சொல்லிவிடப் போறன். சிலருக்கு மாரடைப்பு வந்துவிடும் என்று கூறி மாலதி சிரித்தாள்.

அது சிலருக்கு காதில் ஈயம் காய்ச்சி ஊற்றியது போல இருந்தது. உண்மை சுடும்!!!

# வலி

சுமைகளின் இடுக்கில்
நசுக்கப்பட்டு வழிந்திடும்
இரத்தம் காய முன்
முட்களின் படுக்கையில் பரப்பப்பட்டு
இறுக்கிப் பிடிக்கிறது வறுமை!

பத்துத் திங்கள் பொறுத்துப்
பெற்றதை சுருட்டி அநாதை எனும்
பட்டத்துடன் வீசும்போதே
இறந்து போனது உணர்வுகள்
உடல் மட்டும் ஜடமாய்!

உறவுகளைத் தேடி
உள்ளம் அலையும் முட்டி மோதி
காயங்களுடன் மீண்டும் என்னிடமே
வந்து சேரும் மாற்றங்கள்
எதுவுமின்றி ஏக்கங்கள் மீதமாய்!

எண்ணிலடங்கா கனவுகள்
கதை பேசும் இரவுகள்
நிலவும் எனக்கு துணையில்லை
வாழ்க்கை பக்கங்கள் அனைத்தும்
அமாவாசை என்பதால்!

இரத்தம் உறைந்திடும் ஈரம் இல்லா
உள்ளங்கள் உள்ளங்கையில்
எறிந்திடும் ஏளனப் பார்வைகளால்
அதிருமிதயம் அடங்கிடும்!

குற்றம் செய்யாமல் சிறைவாசம்
ஆயுள் தண்டனையை
தூக்குத் தண்டனையாய்
மாற்றி விடுங்கள் உடலாவது
மண்ணின் பசி தீர்க்கட்டும்!!!

**ஷப்னா செய்னுல் ஆப்தீன் – இறக்குவானை**

# புலமைப் பரீட்சை

## சிறுகதை

கினியம இக்ராம் தாஹா

வழமைபோல் சூரியன் தன் கதிர்களை தரணியெங்கும் பரப்பிக் கொண்டிருந்தான். கதீஜா வீட்டு முற்றத்தைப் பெருக்கிக் கொண்டிருந்தாள். பாடசாலை விடுமுறை தினம் என்பதால் மகன் ஆசிப் இன்னும் புரண்டு புரண்டு தூங்கிக்கொண்டிருந்தான். கணவர் மஜீத் கிணற்றடியில் மோட்டார் சைக்கிளை கழுவித் துடைத்துக் கொண்டிருந்தான்.

“விசேட செய்திகள்.. இன்று ஐந்தாம் ஆண்டு புலமைப் பரீட்சை பெறுபேறு இணையத்தளத்தில் வெளியிடப்பட்டுள்ளது” என்ற அடுத்த வீட்டு வானொலியில் ஒலித்த செய்தி, கதீஜாவின் காதில் பட்டதும் அப்படியே செய்த வேலையை கைவிட்டு..

“என்னங்க.. என்னங்க..” என கணவனிடம் ஓடோடி வந்தாள்.

“என்னங்க ஆ.. நீங்க இங்கதான் நிக்கிறீங்களா...?

“ஏம்மா படபடப்புடன் ஓடி வர்ர.. என்ன விசயம்..?”

“எல்லாம் சந்தோசமான விசயம்தான்.. இப்போ நிவுஸ்ல சொன்னாங்க ஸ்கொலசிப் ரிசல்ட் வந்திட்டாம்... இன்டர்நெட்ல பார்க்கலாமாம்...” கதீஜா சந்தோசத்துடன் கணவனிடம் சொன்னாள்.

“அடட... வந்திட்டுதா... அப்போ சந்தோசம்தான்... மகன்ட இன்டெக்ஸ் நம்பர் தாங்க நான் கொமினிகேசன் போய் பார்த்திட்டுவாரன்...

“போன்லயும் பார்க்க ஏலும்போல... அன்னிக்கு ஹமீதா அன்டி சொல்லிச்சு...”

“போன்ல பார்க்கிர இலவெல்லாம் தெரியாதுபுள்ள.. நம்ம புள்ள படிச்ச அளவு நான் படிச்சிருந்தா எங்கயாவது ஒபீஸ்லதானே வேல பார்த்து இருப்பன்... ஹூம்.. நான் கொமினிகேசன்ல பார்க்கிறன்... எங்க மகன்... அவன எழுப்பி விடுங்க...”

“சரிசரி நீங்க பார்த்திட்டு அவசரமா வாங்க... முடியும்னா பிரின்ட்அவுட் வாங்கிட்டு வாங்க... அப்போ எங்க சின்னவன்ட கெட்டிதனத்த அக்கம்பக்கம் எல்லாம் காட்டலாம்... இப்போ அவனுக்கு வாக்கு கொடுத்தமாதிரி கிப்ட்

பைசிகிளும் வாங்கிக் கொடுக்கனுமே..."

"ஓ.. கட்டாயம் நான் போயிட்டு வர்ரன்.. வாய்க்கு ருசியா என்ன சரி சமைச்சு வைங்க...!"

கணவன் மஜீதின் பைக் கொமினிகேசனை நோக்கி சீறிப் பாய்ந்தது.

"தங்க ராசா எழும்புங்கடா... உங்கட ரிசல்ஸ் வருது.... அவசரமா எழும்புங்க.. என்று மகனை எழுப்பியவாறு அடுக்களைக்குள் நுழைந்தாள் கதீஜா.

வேண்டாவெறுப்புடன் கைகளை முறுக்கிச் சோம்பல் விட்டவாறு மகன் இம்ரான் எழும்பினான். அவன் கடந்த இரண்டு மாதங்களாகத்தான் சுதந்திரம் என்ற சுவாசக் காற்றை நிம்மதியாகச் சுவாசிக்கிறான்.

ஆம். அவன் ஐந்தாம் ஆண்டு மாணவன். ஐந்தாம் ஆண்டு என்றால் கேட்கவா வேண்டும்? அந்த வகுப்பை அடைந்துவிட்டால் அனைத்து மாணவர்களும் ஒரு தேர்தல் வேட்பாளர்கள் போன்றாகி விடுகின்றனர், அவர்கள் விரும்பியோ விரும்பாமலோ போட்டித்தன்மைக்கு உந்தப்படுகின்றனர். நான்காம் ஆண்டிற்கு சித்தியடைந்துவிட்டால் அடுத்த இலக்கு புலமைப்பரீட்சை. அதனால் நான்காம் ஆண்டு முதலே கொஞ்சம் கொஞ்சமாக தயார்படுத்தப்படுகின்றனர், சுற்றித்திரியும் சின்னஞ்சிறுசுகள். அவர்களுடைய சக்தியைத் தாண்டிய அறிவு அவர்களுக்குள் புகுத்தப்படுகிறது. தனது விருப்புவெறுப்புக்கள் ஓரங்கட்டப்படுகின்றன.

இம்ரானும் அதற்கு விதிவிலக்கல்ல. நான்காம் ஆண்டை அவன் எட்டிப் பிடித்ததிலிருந்து ஐந்தாம் ஆண்டு ஸ்கொலசிப்பிற்காக அவனின் பெற்றோர்களால் அடித்தளமிடப்பட்டது.

ஐந்தாம் ஆண்டை அடைந்ததும் இம்ரான் பம்பரமாய் சுழன்றான். இல்லை இல்லை பெற்றோரால் பம்பரமாய் சுழற்றப்பட்டான். அவனும் படிப்பில் திறமைசாலிதான். இருந்தாலும். தான் சுதந்திரம் பறிக்கப்பட்டு முழுமூச்சாக படிப்பு படிப்பு என்றிருந்ததால் மனதில் சொல்லிக்கொள்ள முடியாத வெறுப்பும் ஒருபக்கம் இருக்கத்தான் செய்தது.

பாடசாலையில் படிப்பு.. பின்நேர பிரத்தியேக வகுப்பு என்று ஆரம்பித்த இம்ரானின் வாழ்க்கை சனி - ஞாயிறு பிரைவட் டியுஷன்.. இரவில் வீட்டில் மகுத் மாஸ்டரின் தனி வகுப்பு. இது தவிர செமினார்.. ஓய்வு நேரங்களில் கணிப்பீட்டுப் பரீட்சைப் பேப்பர்களை அவன் தாய் கதீஜா செய்யக்கொடுப்பாள். காலை எழுந்தால் இரவு 10 மணிக்கு தூங்கும்வரை படிப்பு படிப்பு என்றே அவனது வாழ்க்கை நகர்ந்தது. ஓய்வுநேரம்.. விளையாட்டு எல்லாம் தடைப்பட்டது. மனதில் ஆயிரம் ஆசைகள் இருந்தாலும் எல்லாம் கட்டுப்படுத்தி படிப்பில்

கண்ணும் கருத்துமாக இருந்தான். ஒருசில நேரங்களில் அவனையும் மீறி கொஞ்ச நேரம் விளையாடினால்.. அல்லது டீவி பார்த்தால்..

"டேய்.. என்னடா படிப்புல மண்ண அள்ளிப் போடப் போறியா... நஸீமா அன்டியாங்கட மவள் மாஜிதா எப்படிப் படிக்கிறா தெரியுமா... ஹூம்... போய் எக்ஸாம் பேபர் எடு.. நான் வாரன்.." என கதீஜா கத்தும் போது மீண்டும் படிப்பு தேசத்திற்குள் நுழைந்து விடுவான் இம்ரான்.

கதீஜா மஜீத் தம்பதியினர் சாதாரண குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். என்ன கஷ்டம் என்றாலும் மகன் இம்ரானுக்கு எந்த கஷ்டத்தையும் வைக்கவில்லை. எல்லா வகையிலும் இம்ரானின் படிப்பிற்கு ஒத்துழைப்பு வழங்கினர்.

பாடசாலையிலும் அதிபர் மற்றும் ஆசிரியர்கள் ஐந்தாம் ஆண்டில் கல்வி பயிலும் அனைத்து மாணவர்களையும் நல்லதொரு நிலமைக்கு கொண்டு வரவேண்டும் என்ற ஒரே நோக்கத்தில் மும்முறமாக இருந்தனர்.

இரண்டு மாதங்களுக்கு முன்னர் பரீட்சை முடிந்துவிட்டது. அதன்பின்னர்தான் பிள்ளைகளுக்கு ஒரு விடுதலை போன்ற நிம்மதி. சுதந்திரப் பறவைகளாய் தாம் விரும்பியவாறு சிறகடித்துப் பறந்தனர். இம்ரானைவிட அவனுடைய பெற்றோரும் ஆசிரியர்களும் அவனை விசேட சித்தி பெறும் மாணவர்களில் ஒருவனாக எதிர்பார்த்திருந்தனர். அதனால் இம்ரானும் சும்மா நிற்கவில்லை. பரீட்சையில் சித்தியடைந்தால் புதிய சைக்கிள் ஒன்று வாங்கித் தரும்படி கேட்டான். அதற்கும் பெற்றோர் சம்மதித்தனர்.

பல பெற்றோர்களின் ஆசிரியர்களின் மாணவர்களின் பல கனவு எதிர்பார்ப்புகளுக்கு மத்தியில் இன்று பெறுபேறு வெளியாகிறது.

**********

கணவன் மஜீதின் பைக் வரும் சத்தம் கேட்டதும் கதீஜா சந்தோசத்துடன் ஓடோடி வந்தாள்..

"என்னங்க.. எத்தன மார்க்ஸ்?"

மஜீத் மௌனமாக உள்ளே வந்தான்..."

"ஏ.. என்னங்க.. உங்களத்தான்.."

மஜீத் எதுவும் பேசவில்லை. கையிலிருந்த பிரின்ட் எடுத்த ரிஸல்ஸ் பேப்பரை மனைவி கையில் கொடுத்தான்.

அப்போது இம்ரானும் அங்கே ஓடோடி வந்தான். "அட ரிஸல்ஸ் வந்திருச்சா?"

பேப்பரைப் பார்த்த கதீஜா.

"ஐயோ... என்னடா இது? வெறும் 100 மார்க்ஸா? எல்லாம் போச்சே? ஐயோ.." எனக் கத்திவிட்டாள்.

"என்ன நூறா?" இம்ரான் பேந்தப் பேந்த விளித்தான்.

"மாடு.. மாடு எங்கட மானத்தையே வாங்கிட்டியே" எனக் கோபத்துடன் கத்திய கதீஜா ஆத்திரம் தாங்க முடியாமல் தபாரென இம்ரானின் முதுகில் ஓங்கி அடித்தாள்.

"ஆய்.. உம்மோ" என வலி தாங்க முடியாமல் அழுதுகொண்டே வீட்டிற்குள் ஓடினான் இம்ரான்.

"மவனுக்கு செலவழிச்ச காசெல்லாம் அநியாமா போச்சு.. சொல்லி வேல இல்ல..." மஜீத் மன உளைச்சலுடன் மனைவியிடம் சொன்னான்.

"காசவிட எங்கட கௌரவம்... இப்போ எல்லோரும் எங்கள் கிண்டல் பண்ணுவாங்களே.. இப்போ எப்படி ஊருக்கு முகம் காட்டுறது? இந்த எருமைக்கு தின்னக் கொடுத்தது மிச்சம்.. எருமை... எரும.. இனி பட்டினிதான் போடனும்.."

இருவரும் ஒருவர் மாறி ஒருவர் ஆத்திரம் அடங்கும்வரை இம்ரானைத் திட்டிக்கொண்டிருந்தனர். இம்ரான் கட்டிலில் புரண்டு அழுதுகொண்டிருந்தான். அதேநேரம் மஜீதின் நண்பன் ஆரிப் அவருடைய மகன் சமீருடன் வந்தார். மனசுக்குள் குழப்பம் ஆத்திரத்துடன் அவர்களை வரவேற்று உட்கார வைத்தனர். இம்ரானைக் காணாத சமீர்..

"அங்.. அங்கிள்.. எங்க இ..இம்ரா..ன்.." என தட்டுத் தடுமாறிக் கேட்டான். இம்ரானின் வயதை எட்டிப் பிடித்தாலும் மூளை வளர்ச்சி குறைவு என்பதால் சிறுபிள்ளைத்தனமாகத்தான் இருந்தான்.

கலகலப்பு இல்லாமல் வேண்டா வெறுப்புடன் வாடிய முகத்துடன் இருந்த கதீஜா மற்றும் மஜீதிடம் "என்ன டல்லா இருக்கீங்க.. ஏதும் சிக்கலா?" என ஆரிப் கேட்டார்..

"அது சொல்லி வேல இல்ல மச்சான்... இன்னிக்கு ஸ்கொலசிப் ரிசல்ஸ் வந்திருக்கு... எங்கடவன் பாஸ் பன்ன இல்லயே.."

“ஓஹ் அதான் டல்லா இருக்கீங்க...?”

“ஓ நானா.. எவ்வளவு எதிர்பார்ப்போட இருந்தம்... நாங்க அவனுக்கு இந்த ரெண்டு வருசமா டிவுசன் டிவுசன்னு எவ்வளவு செலவழிச்சு இருக்கோம்...

“பாரு மச்சான்.. புக்ஸ்.. எக்ஸாம் பேப்பர்... நிறைய கிளாஸ் செமினார்.. திங்க இல்லாட்டியும் அவன்ட படிப்புக்கு குறை வைக்க இல்ல.. கழுத அவனுக்கு அடிச்சும் போதாது.”

“ஆரிப் நானா.. எங்கட கவலய யார்கிட்ட சொல்ல.. வெக்கம் ஒரு பக்கம்.. இந்த கொஞ்ச நேரத்துக்குள்ள எத்தன பேரு கோல் எடுத்து ரிஸல்ஸ் கேட்டுட்டாங்க.. வெளிய தல காட்டவே வெக்கம்.. ஹூம்..”

ஆரிபிடம் இருவரும் தமது கவலையைக் கொட்டிகொண்டிருந்தனர்.

மௌனமாக கேட்ட ஆரிப்.

இங்க பாருங்க... தங்கச்சி... மச்சான் மஜீத் நீயும்தான். டோன்ட் வொரி. டேக் இட் ஈஸி... இதெல்லாம் பெரிசா போட்டு அலட்டிக் கொள்ளாதீங்க... ஸ்கொலசிப் இப்போ ஒரு வியாதியாவும் வியாபாரமாவும் மாறிடிச்சு... இது நல்ல நோக்கத்திற்கு ஆரம்பிச்சது... இன்னிக்கு அதால எத்தன பிள்ளகள்ட மனசு, வாழ்க்க பாதிக்குது..

ஸ்கொலசிப் கிளாஸ் நடக்கிறதால பிள்ளகளுக்கு நல்ல அறிவு வளருது. சொல்லப் போனால் அதுகளுக்கு தெரிந்த அறிவு எங்களுக்குத் தெரியாது. அந்த அளவு கெட்டித்தனமா இருக்கு.. போட்டித்தன்ம இருக்கனும்.. அதனால தான் பிள்ளகள் நல்லா படிக்கிறாங்க.

வெற்றி - தோல்வி சகஜம்.. தோல்விதான் வெற்றியின் அடுத்த கட்டம்.. அடுத்தவர் சொல்ற கதகள கேக்க வேணாம்.. வரட்டு கௌரவம் பார்க்க வேணாம்.. புள்ளய திட்டாதீங்க.. அவன தட்டிக்கொடுங்க.. அவன்ட லைப் நல்லா வரும்..

இப்போ என்ட மகன் சமீர்... அவனுக்கு ஒன்னும் விளங்காது கிரேட் 6 படிக்கனும்.. ஆனா அவன்ட மூள வளர்ச்சி குறைவு. அவன குணப்படுத்த ஏலாது. அது எங்களுக்கு நல்லா தெரியும். ஆனா அவன நாங்க ஸ்கூல் அனுப்புறம்.

நான் வேலைக்குப் போனாலும் என்ற வைப் டேய்லி ஸ்கூல் கூட்டிப் போய்விட்ரா.. திருப்பி கூட்டிவர்ரா. அவ வீட்டு வேல பார்க்கனும்.. இன்னும் சின்னப் பிள்ளைகள் 2 இருக்கு. அதுகளையும் பார்த்துக்கொண்டு இந்த

பிள்ளைய தவறாம ஸ்கூல் கூட்டிபோறா. எவ்வளவு கஷ்டம்? அதுக்காக பிள்ளை படிக்கிற இல்லன்னு சும்மா இருக்கலாமா? ஸ்கூல் கூட்டிப் போனாத்தானே ஏதாவது சின்ன அறிவாவது கிடைக்கும்.

நீங்க ஒங்க மகனுக்கு செலவளிச்சது வீணாகிட்டுதுன்னு நினைக்க வேணாம். அவனுக்கு ஏதோ நல்ல அறிவு கிடச்சிருக்கு.. ஸ்கொலசிப்போட படிப்பு நிக்க இல்ல. மிச்சம் பேரு ஸ்கொலசிப் வரத்தான் பிள்ளைகள விரட்டி விரட்டி படிக்க வைப்பாங்க. அதுக்கப்புறம்? அவர்களும் அவர்களின்பாடும். அது தவறு. இப்போ மகனுக்கு ஆறதலா இருங்க.. எல்லாம் சரிவரும்.

கதீஜா கொடுத்த டீயைச் சுவைத்தபடி, ஆரிப் இருவருக்கும் ஆறுதல் வார்த்தைகளைச் சொல்லிக்கொண்டிருந்தார். ஆனால் இதை கதீஜாவும் மஜீதும் புரிந்துகொண்டார்களா? இதுபோன்ற பெற்றோர் புரிந்துகொள்வார்களா? என்பதைக் காலம் தான் பதில் சொல்லும்!!!

# பூங்காவனம் பற்றி வாசகர்கள்

பூங்காவனம் இதழ் 27 இல் இடம்பெற்ற எச்.எப். ரிஸ்னா அவர்களின் நேர்காணலை வாசித்தேன். இளம் வயதிலேயே தன்னகத்தே இத்தனை திறமைகளைக் கொண்டு விளங்குகின்றார். அதனால்தான் அவரால் 09 நூல்களை வெளியிட்டு வெற்றி நடை போட முடிகின்றது. பலரையும் அறிமுகப்படுத்தும் பூங்காவனம் இதழில் துணை ஆசிரியரின் நேர்காணல் எப்போதோ பிரசுரிக்கப்பட்டிருக்க வேண்டும். கால தாமதமாகி வெளிவந்தாலும் அருமையான கருத்துக்களை வாசகர்களுக்கு அளித்துள்ள விதம் மனதை அள்ளுகிறது. வாழ்த்துக்கள்!!!

**ஏ.ஆர். பாத்திமா ஷாமிலா – கண்டி**

வெற்றி நடை போட்டு வரும் பூங்காவனமே
உன்னால் மகிழ்கின்றது என் மனமே..
நேர்காணல், கவிதை, சிறுகதை, நூல் விமர்சனம், கட்டுரை ஆகிய
மலர்களை தவறாமல் பூத்து
எம் நெஞ்சிலும் கொலுவீற்றிருக்கும் அரசியே..
உன் வாசகனாய் இருப்பதில் எனக்கொரு மகிழ்ச்சி
என் சிந்தனைக்கு எழுச்சி..
என்றும் நீ அடைவாய் உயர்ச்சி!!!

**வி. சுதன் – மஸ்கெலியா**

# நூலகப் பூங்கா




நூலின் பெயர் - அவள் ஒரு தனித்தீவு
நூலின் வகை - கவி(க)தை
நூலாசிரியர் - கவிச்சுடர் சிவரமணி
விலை - 300 ரூபாய்




நூலின் பெயர் - ஒரு பிடி மண்
நூலின் வகை - சிறுகதை
நூலாசிரியர் - மல்லாவிக் கஜன்
வெளியீடு - கலாசாரப் பேரவை
விலை - 220 ரூபாய்





நூலின் பெயர் - கடந்து போகும் சத்தங்கள்
நூலின் வகை - கவிதை
நூலாசிரியர் - ஹஸனார் ஐயூப்கான்
விலை - 200 ரூபாய்



நூலின் பெயர் - கடல் ஒரு நாள் எங்கள் ஊருக்குள் வந்தது
நூலின் வகை - கவிதை
நூலாசிரியர் - ஏ. பீர்முகம்மது
விலை - 100 ரூபாய்




நூலின் பெயர் - தாய் நிலம்
நூலின் வகை - சிறுகதை
நூலாசிரியர் - ஆ முல்லைதிவ்யன்
வெளியீடு - வர்ணா வெளியீட்டகம்
விலை - 100 ரூபாய்




நூலின் பெயர் - ஐந்து கண்டங்களின் மண்
நூலின் வகை - கவிதை
நூலாசிரியர் - எச்.ஏ. அஸீஸ்
வெளியீடு - எம்.எஸ். ஹமீத் வெளிட்டகம்
விலை - 500 ரூபாய்




நூலின் பெயர் - சின்னப் பாப்பா
நூலின் வகை - சிறுவர் பாடல்கள்
நூலாசிரியர் - பீ.ரீ. அஸீஸ்
வெளியீடு - பாத்திமா றுஸ்தா பதிப்பகம்
விலை - 210 ரூபாய்



நூலின் பெயர் - அக்கினியாய் வெளியே வா
நூலின் வகை - கவிதை
நூலாசிரியர் - இராகலை தயானி
வெளியீடு - புரவலர் புத்தகப் பூங்கா
விலை - 150 ரூபாய்





நூலின் பெயர் - பத்ர் யுத்தம்
நூலின் வகை - ஆன்மீகம் (ஸலவாத் மாலை)
நூலாசிரியர் - மருதூர் ஜமால்தீன்
வெளியீடு - தீன் ஜோதி இலக்கிய மன்றம்
விலை - 50 ரூபாய்




நூலின் பெயர் - ஈர நிலத்தை எதிர்பார்த்து
நூலின் வகை - கவிதை
நூலாசிரியர் - மன்னார் பெனில்
வெளியீடு - மன்னார் தமிழ்ச் சங்கம்
விலை - 250 ரூபாய்




நூலின் பெயர் - இலக்கியம் விசேட மலர் 2015
நூலின் வகை - கட்டுரை
பதிப்பாசிரிய - சு. முரளிதரன்
வெளியீடு - கலாசார அலுவல்கள் திணைக்களம்




நூலின் பெயர் - சிறுவர் கவிதைகள்
நூலின் வகை - சிறுவர் கவிதை
நூலாசிரியர் - கிச்சிலான் அமதுர் ரஹீம்
விலை - 100 ரூபாய்

With Best Compliments From...




LUCKYLAND BISCUIT MANUFACTURERS

NATTARANPOTHA, KUNDASALE, SRI LANKA.
TEL - 0094 - 081 - 2420574, 2420217. FAX - 0094 - 081 - 2420740
Email - luckyland@sltnet.lk

9 772012 670007

Designed By - Rimza Mohamed